உ



# இல்லத்து ஜோதி

அமரர்

திருமதி சறோஜாதேவி சிவபாலன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



அமரர்

# திருமதி சரோஜாதேவி சிவபாலன்

*(ஓய்வு பெற்ற ஆசிரியை)*


அவர்களின்

*சிவபதப்பேறு குறித்து வெளியிடப்படும்*

# இல்லத்து ஜோதி

29.06.2021

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சமர்ப்பணம்

அறிவு, அன்பு, அடக்கம், பரிவு, பணிவு, பக்தி, பாசம் எனும் பண்புகளின் ஜீவ ஊற்றாய் விளங்கி எங்கள் இதயத்தில் நீங்கா இடம் பெற்று நித்தியமாய் ஜொலித்து, பாங்காய் வீற்றிருந்த எங்கள் குடும்பத் தலைவியே!

தாரமாய், தாயாய் தன்னிகரற்று விளங்கி எமது வாழ்வின் வளர்ச்சிக்கும் உயர்ச்சிக்கும் உதவிய உயிரே!

இன்று எம்மை ஆறாத்துயரிலும், மீளாத வேதனையிலும் ஆழ்த்திவிட்டு ஆண்டவர் அடியில் சரணடைந்துவிட்ட உங்கள் திருக்கரங்களில் இச் சிறு நினைவுமலரைச் சமர்ப்பிக்கின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**இங்ஙனம்**

**தங்கள் பிரிவால் துயருறும்**

**- கணவன், பிள்ளைகள்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்"



மண் மகிழ
22.04.1954

விண் தழுவ
30.05.2021

அமரர்

# திருமதி சறோஜாதேவி சிவபாலன்

(ஓய்வு பெற்ற ஆசிரியை)

## திதி நிர்ணய வெண்பா

பிலவ வருஷத்து வைகாசித் திங்கள் பதினாறாம் நாள்
உத்தராட நட்சத்திர அபரபக்க சதுர்த்தித் திதி - சேரவே
அன்பிற்கினிய சறோஜாதேவி அகிலம் விட்டு
சென்றடைந்தார் சிவன் தாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ
சிவமயம்

# பஞ்சபுராணம்



திருச்சிற்றம்பலம்

## பிள்ளையார் துதி

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலு மெயிற்றனை
நந்தி மகன்தனை ஞானக் கொழுந்தினைப்
புந்தியில் வைத்தடி போற்றுகின்றேனே.

## தேவாரம்

இடரினும் தளரினும் எனதுறுநோய்
தொடரினும் உனகழல் தொழுதெழுவேன்
கடல்தனில் அமுதொடு கலந்தநஞ்சை
மிடறினில் அடக்கிய வேதியனே
இதுவோஎமை ஆளுமா றீவதொன்றெமக் கில்லையேல்
அதுவோவுன தின்னருள் ஆவடுதுறை அரனே.

## திருவாசகம்

பூசுவதும் வெண்ணீறு பூண்பதுவும் பொங்கரவம்
பேசுவதும் திருவாயால் மறைபோலுங் காணேடீ
பூசுவதும் பேசுவதும் பூண்பதுவுங் கொண்டென்னை
ஈசனவன் எவ்வுயிர்க்கும் இயல்பானான் சாழலோ.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவிசைப்பா

கற்றவர் விழுங்கும் கற்பகக் கனியைக்
   கரையிலாக் கருணைமா கடலை
மற்றவர் அறியா மாணிக்க மலையை
   மதிப்பவர் மனமணி விளக்கைச்
செற்றவர் புரங்கள் செற்றஎம் சிவனைத்
   திருவீழி மிழலைவீற் றிருந்த
கொற்றவன் றன்னைக் கண்டுகண் டுள்ளம்
   குளிரஎன் கண்குளிர்ந் தனவே

## திருப்பல்லாண்டு

சீரும் திருவும் பொலியச் சிவலோக
   நாயகன் சேவடிக்கீழ்
ஆரும் பெறாத அறிவுபெற் றேன்பெற்ற
   தார்பெறு வார்உலகில்
ஊரும் உலகும் கழற உழறி
   உமைமண வாளனுக்காட்
பாரும் விசும்பும் அறியும் பரிசுநாம்
   பல்லாண்டு கூறுதுமே

## திருப்புராணம்

இறவாத இன்ப அன்பு
   வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
   பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும் இன்னும்
   வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவாநீ ஆடும் போதுன்
   அடியின்கீழ் இருக்க என்றார்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புகழ்

இசைந்த ஏறுங் கரியுரி போர்வையும் எழில்நீ றும்
இலங்கு நூலும் புலியத ளாடையு மழுமானு,
அசைந்த தோடுஞ் சிரமணி மாலையு முடிமீதே
அணிந்த ஈசன் பரிவுடன் மேவிய குருநாதா
உசந்த சூரன் கிளையுடன் வேரற முனிவோனே
உகந்த பாசங் கயிறொடு தூதுவர் நலியாதே
அசந்த போதென் துயர்கெட மாமயில் வரவேணும்
அமைந்த வேலும் புயமிசை மேவியபெருமாளே.

## வாழ்த்து

வான் முகில் வழாது பெய்க மலிவளஞ் சுரக்க மன்னன்
கோன் முறை அரசு செய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க
நான் மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்வி மல்க
மேன்மை கொள் சைவ நீதி விளங்குக உலகமெல்லாம்.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் திருமதி சறோஜாதேவி சிவபாலன் அவர்களின்
# வாழ்க்கை வரலாறு

ஈழ வள நாட்டின் வடபால் அமைந்துள்ள கோண்டாவில் கிராமம் கோயில்களுக்கும் விவசாயத்திற்கும் பெயர் போன இடமாகும். இப் புகழ் பெற்ற கோண்டாவில் பதியில் உயர் வேளாளர் குடியில் அவதரித்து பேரும் புகழுடனும் வாழ்ந்தவர்களான அமரர்கள் சிவப்பிரகாசம் திருநாவுக்கரசு துரைரத்தினம் தம்பதிகளின் மூன்றாவது புத்திரியாக 22.04.1954ம் திகதியில் அமரர் சறோஜாதேவி சிவபாலன் அவர்கள் பிறந்தார். அவர்களின் பாசமிகு உடன் பிறப்புக்களாக திருமதி லங்காதேவி சிவராசா (ஓய்வுநிலை ஆசிரியர்) திரு திருநாவுக்கரசு சிவகுமாரு (நியூசிலாந்து) காலஞ்சென்ற சுசிலாதேவி, திரு திருநாவுக்கரசு ராஜ்குமார் (பிரான்ஸ்) திருமதி சுதர்சினி பரந்தாமன் (அவுஸ்திரேலியா) ஆகியோர் விளங்குகின்றனர்.

அமரர் தனது ஆரம்பக்கல்வியை யா / கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திலும் உயர்தரக்கல்வியை யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலையிலும் பெற்றார். சிறந்த அறிவும், அமைதியும், தெய்வபக்தியும் கொண்டு விளங்கிய இவர் விஞ்ஞான பாட ஆசிரியராக 1977ம் ஆண்டு நியமனம் பெற்றார். அவர் ஆசிரியப் பணியை யா / கொக்குவில் நாமகள் வித்தியாலயத்தில் ஆரம்பித்தார். அடுத்து யா / இணுவில் சைவப்பிரகாச வித்தியாசாலையில் கற்பித்த போது பலாலி ஆசிரியர் பயிற்சிக் கலாசாலையில் பயின்று விஞ்ஞான பாட பயிற்சி ஆசிரியராக வெளியேறினார். அதன் பின் அச்சுவேலி மகா வித்தியாலயத்தில் விஞ்ஞான ஆசிரியையாக சேவையாற்றினார்.

இக்காலப் பகுதியில் அமரரின் பெற்றோர் மகளுக்கு திருமணம் செய்வது பற்றி சிந்தித்தனர். கோண்டாவிலில் வசித்த ஆசிரிய தம்பதிகளான காலஞ்சென்றவர்களான குழந்தைவேலு சபாரட்ணம் மரகதம் தம்பதிகளின் புத்திரரும், மக்கள் வங்கியின் முகாமையாளருமான திரு சபாரட்ணம் சிவபாலன் அவர்களை திருமணம் பேசி முடித்தனர். 02.04.1980 அன்று திருமணம் இனிதே நிறைவேறியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னார் இத்திருமண உறவினூடாக திருமதி தேவசேனா பாலகிருஸ்ணேஸ்வரன் (ஓய்வுநிலை ஆசிரியர்), திருமதி சிவயோகி தபோதநாயகம் (ஓய்வுநிலை ஆசிரியர்), திருமதி மாலதி நித்தியகீர்த்தி (அவுஸ்திரேலியா), திரு சபாரட்ணம் உமாபாலன் (கனடா) ஆகியோரை மைத்துனர்களாகப் பெற்றுக் கொண்டதுடன் தனது உடன் பிறப்புக்களின் திருமண உறவுகளின் மூலம் திரு பொன்னம்பலம் சிவராசா, அமரர் திருமதி சிவகுமாரு ஞானேஸ்வரி, திருமதி ராஜ்குமார் ஜெயரூபி, திரு இலங்கையர் பரந்தாமன் ஆகியோரையும் மைத்துனர்களாகப் பெற்றுக் கொண்டார். அமரர் உற்றார் உறவினர்களுடனும், சுற்றத்தார்களுடனும் புன்சிரிப்புடன் மிகவும் அமைதியான அன்பு கலந்த சொற்களால் உறவாடி மகிழ்வார்.

சிவபாலன் சறோஜாதேவி தம்பதிகளின் அன்போடு கலந்த இல்வாழ்வின் பேறாக இரு பெண் குழந்தைகள் பிறந்தனர். லக்ஷிதா, ஹம்ஷிதா எனப் பெயரிட்டு பிரியமாக வளர்த்தனர். அவர்கள் தங்கள் ஆரம்பக்கல்வியை யாழ் இந்து மகளிர் ஆரம்பப் பாடசாலையிலும் உயர்கல்வியை யா / வேம்படி மகளிர் உயர்தரப் பாடசாலையிலும் பெற்றுக் கொண்டனர். 5ம் தர புலமைப்பரிசில் பரீட்சை க.பொ.த (சா.தர) பரீட்சை என்பவற்றில் மிகச் சிறந்த பெறுபேறுகளைப் பெற்றுக் கொண்டனர். மூத்த புதல்வியான லக்ஷிதா அவர்கள் க.பொ.த (உ.தர) பெறுபேற்றுடன் முகாமைத்துவ உதவியாளராக தெரிவு செய்யப்பட்டு இன்று நிர்வாக உத்தியோகத்தராக கட்டடங்கள் திணைக்களத்தில் பணிபுரிகின்றார். அவருக்கு ஏற்ற வாழ்க்கைத் துணையாக வண்ணார்பண்ணையைச் சேர்ந்த அமரர் ஜேர்மையா பத்மநாதன் மற்றும் இந்திராணி பத்மநாதன் தம்பதிகளின் செல்வப்புதல்வரும் வேலணை பிரதேசசபைச் செயலாளராக பணியாற்றுபவருமான திரு பத்மநாதன் சிவஞானவேல் அவர்களைத் திருமணம் செய்து வைத்தனர். சிவபாலன் சறோஜாதேவி தம்பதியினர் மூத்த மகள் வழி பேர்த்திகளாக பிரணவி (யா / இந்து மகளிர் கல்லூரி) நர்த்தவி (யா / வேம்படி மகளிர் உயர்தர பாடசாலை) ஆகியோரைக் கண்டு மகிழ்ந்தனர்.

இரண்டாவது புதல்வியான ஹம்ஷிதா அவர்கள் இலங்கை யாழ் பல்கலைக்கழகத்தில் விஞ்ஞானமானி பட்டதாரியாக கல்வி கற்று அரசசேவையில் உள்வாங்கப்பட்டார். அவருக்கேற்ற வாழ்க்கைத் துணையாக உரும்பிராயைச் சேர்ந்த திரு சின்னத்துரை நிர்மலேந்திரன் சுசிலாம்பிகை தம்பதிகளின்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செல்வப்புதல்வரான பொறியியலாளர் தீபன் அவர்களைத் திருமணம் செய்து வைத்தார்கள். இத்தம்பதியினர் தற்போது தொழில் நிமித்தம் சிங்கப்பூரில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்களின் இல்வாழ்க்கைப் பேறாக பிரகதி என்ற பேர்த்தியையும் தர்மிக், கஜலக்ஷன் என்ற இரு பேரர்களையும் கண்டு மகிழ்ந்தனர். இவ்வாறு தனது குடும்பத்தின் மூலம் சிறப்புக்களைப் பெற்ற அமரர் தனது ஆசிரிய சேவை மூலம் மிகப் பெரிய புகழையும் பெருமையையும் பெற்ற பேறுடையவர்.

1985ம் ஆண்டு முதல் யா / கோண்டாவில் இந்து மகா வித்தியாலயம் என அப்பொழுது அழைக்கப்பட்ட யா / கோண்டாவில் இந்துக் கல்லூரியில் சேவையாற்றினார். அவர் ஆசிரிய சேவையை இறைவனின் சேவையாக நினைத்துச் செயற்பட்டவர். ஓர் நாள் கூட பாடசாலைக்கு நேரம் பிந்தி வந்ததில்லை. அதே போல் பாடசாலை விட்ட உடன் வீட்டிற்கும் சென்றதில்லை. தனக்கென ஒதுக்கப்பட்ட கடமைகளை மிகவும் பொறுப்புடனும், சிரத்தையுடனும் செய்பவர். அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள், ஏனைய உத்தியோகத்தர்கள் என எல்லோர் மீதும் பற்றும் பாசமும் கொண்டவர். அதிபர் தனக்கு வழங்கும் பொறுப்புக்களை புன்சிரிப்புடன ஏற்று சிறிதும் பிழை நேராது நேர்த்தியாகச் செய்பவர். காலைப்பிரார்த்தனை, விளையாட்டு நிகழ்வுகள், பரிசளிப்பு நிகழ்வுகள் என எல்லா நிகழ்வுகளும் சிவபாலன் ரீச்சரின் பங்கு இன்றி நடைபெறாது.

ஆசிரியர்களுடன் எந்த ஓர் முகச்சுழிப்பும் இன்றி எல்லோரிடமும் அன்புடன் நடந்து கொள்பவர். அவர்களுக்கு எல்லா உதவிகளையும் செய்பவர். ஆசிரியர்களின் தனிப்பட்ட தேவைகளுக்கும் ஓர் நெருங்கிய உறவினர் போல் தீர்ப்பதற்கான வழிவகைகளைக் கூறுவார். அவரது புன்சிரிப்புடனான திருநீறு பூசிய முகம், நீண்ட முடியை பின்னலாக பின்னி விட்ட பாங்கு, மிக வசதியான குடும்பத்தில் இருந்து வருகின்ற போதும் அடக்கமான, எளிமையான உடைகளை அணிந்து வரும் செயற்பாடு, எதிரில் வருபவர்களை கண்டவுடன் தன் சிரிப்பாலும் சொற்களாலும் வரவேற்கும் தன்மை, எந்த இரகசியத்தையும் தன்னுள் பேணும் நேர்மை என்பன உடன் வேலை செய்பவர்களையும், மாணவர்களையும் கவர்ந்து இழுத்ததில் வியப்பில்லை.

மாணவர்கள் "எங்கட சிவபாலன் ரீச்சர்" என்றே அழைப்பார்கள். ஒரு குடும்பத்தில் எவ்வாறு தங்கள் தாயை "எங்கட அம்மா" என அழைப்பார்களோ அவ்வளவு உரிமையுடன், பாசத்துடன் அழைப்பார்கள். அவர் யா/கோண்டாவில்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்துக் கல்லூரிக்கு வந்த பின் எல்லா மாணவர்கள் கையிலும் வங்கி சேமிப்பு புத்தகம் காணப்பட்டது. பிள்ளைகளின் குடும்ப நிலை உணர்ந்து செயற்படுவார். மாணவர்களும் தங்கள் மனக்குறைகளை ஆசிரியருக்கு அருகிருந்து கூறும்படி நடந்து கொள்ளும் இயல்புடையவர். பெற்றார் - ஆசிரியர் - மாணவர் என முத்தொடர்புகளையும் சிறப்பாகப் பேணும் தன்மையுடையவர். ஏனைய ஆசிரியர்களால் படிப்பு வராத குழப்படி மாணவர் எனக் கூறபட்ட மாணவர்களை தனது அறிவுரையால் பல்கலைக்கழகம் வரை செல்ல வைத்தவர். மாணவர் தேவையறிந்து தனது சொந்தச் செலவிலும் கற்றல் உபகரணங்களையும் புத்தகங்களையும் வாங்கிக் கொடுப்பார். அதை எவருக்கும் கூறமாட்டார்.

பாடசாலை பரிசளிப்பு விழாவில் மாணவர்கள் பெறும் பரிசில் தொகைகளை வங்கிப் புத்தகத்தில் சேமித்து அதன் பயனை எதிர்காலத்தில் அவர்களைப் பெறவைத்தார். இவரிடம் கல்வி கற்று வெளிநாடுகள், வெளிமாவட்டங்களில் வேலை செய்யும் மாணவர்கள் தாங்கள் கோண்டாவில் வரும் போது ஒரு முறை சிவபாலன் ரீச்சர் வீட்டிற்கும் செல்ல வேண்டும் என்பதற்கான நேரத்தை ஒதுக்குவார்கள். கட்டாயமாகச் சென்று கதை பேசி மகிழ்வார்கள். இதிலிருந்தே இவரது பெருமையை அளவிட முடியும். மூப்பு, பிணி, சாக்காடு என்பன எல்லோருக்கும் பொதுவானது. அன்பால் கட்டி வளர்க்கப்பட்ட குடும்ப உறுப்பினர்கள் ரீச்சர் நோயுற்ற போதும் சிறப்பாகப் பேணிக் காத்தனர். இந்நிலையில் அன்னார் 30.05.2021 அன்று இறையடி சேர்ந்தார். இன் சொல்லையும், புன்னகையையும் தம் பெரும் செல்வங்களாகப் பெற்று பலரின் மதிப்பையும், உறவையும் பெற்று இல்லறத்தை நல்லறமாகவும் ஒழுக்கத்தையும், உண்மையையும் தம் கொள்கைகளாகவும் கொண்டு வாழ்ந்த அமரர் சறோஜாதேவி சிவபாலன் அவர்களின் ஆத்மா சாந்தியடைய நாம் பிராத்திப்போமாக.

**ஓம் சாந்தி! ஓம் சாந்தி !! ஓம் சாந்தி!!!**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எனது அன்பிற்கினிய வாழ்க்கைத் துணையின் நினைவில் . . .

"தாரமும் குருவும் தலைவிதிப்படி" என்பது எமது ஆன்றோர் வாக்கு நல்ல குருவை அடைந்த ஒருவன் எவ்வாறு மேனிலை அடைய முடியுமோ அதுபோல் நல்ல மனைவியை அடைந்த ஒருவர் வாழ்வில் முழுமையடைய முடியும் எனது சறோவும் அன்பான, குடும்பப்பாங்கான, அமைதியான ஒருவராக கிடைத்தமைக்கு இறைவனுக்கு நன்றி சொல்ல வேண்டும்.

1980.04.02 அன்று திருமணம் செய்த நாள் தொடக்கம் எனது தேவைகளை நான் கேட்டுப் பெற்றுக் கொண்டதில்லை. அதிகாலை எழுந்து காலை உணவு, மதிய உணவு எல்லாம் தயார் செய்து நான் வேலைக்குப் புறப்படும் போது சகலதும் தயார் நிலையில் இருக்கும். சேட், காற்சட்டை தேடத்தேவையில்லை எல்லாம் அதற்குரிய இடத்தில் இருக்கும். எனது வங்கி வேலையின் பொறுப்புணர்ந்து தேவையற்ற சிரமங்களைத் தந்ததில்லை. என்னுடையதும், தன்னுடையதுமான உடன்பிறப்புக்கள், உறவுகளை நேசித்து அவர்களின் தேவைகளைப் பூர்த்தி செய்வதில் என்னை விட ஆர்வமாக செயற்படுவார். எனது தாய், தந்தையார் உயிருடன் இருந்த போது எவ்வாறு கவனித்தாரோ, அதே போல் இறந்த பின்னரும் திதி, திவசம் என்பவற்றை பூரண விருப்புடன் நிறைவேற்றுவார். அவ்வாறே எனது பிள்ளைகளின் வேலைகளையும் பார்த்துப் பார்த்து நிறைவேற்றுவார்.

எந்த ஒரு சந்தர்ப்பத்திலும் கோபமாகவோ, ஆவேசமாகவே பேசி நான் பார்த்ததில்லை. மிகவும் அமைதியாக, புன்சிரிப்புடன், பக்குவமாகப் பேசி காரியம் ஆற்றுவதில் வல்லவர். எனது உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் "சிவபாலன் அதிர்ஷ்டசாலி" என பாராட்டும் வகையில் குடும்பத்தினை வழிநடாத்த உதவியவர். தானும் வேலைக்குச் செல்லும் நிலையில் இருந்த போதும் தனது நாளாந்த கடமைகளில் எதனையும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புறந்தள்ளியதில்லை. தான் குறிப்பிட்டநேரத்திற்குப் பாடசாலை செல்ல வேண்டும் எனில் அதற்கமைய தனது வேலைகளைத் திட்டமிட்டு உரிய நேரத்தில் முடித்து தானும் தனது பாடசாலைக்கு அவசரமின்றி நேரத்திற்கு சென்று விடுவார்.

யாருடனும் தேவையின்றி வீண்கதை பேசியதில்லை, புறங் கூறியதில்லை, பிறருக்கு உதவும் தேவையிருந்தால் பக்குவமாகப் பேசி செய்து கொடுப்பார். இவ்வாறான அன்பான துணைவியுடன் நாற்பது வருடங்களுக்கு மேல் வாழக் கொடுத்து வைத்த இறைவன் 2021.05.30 அன்று எனது அன்புச் சறோவை என்னிடம் இருந்து பிரித்துவிட்டார். "பிறந்தோர் எல்லோரும் ஒரு நாள் இறப்பார்" என்ற உலக நியதிக் கமைய அவரின் இனிய நினைவுகளுடன் வாழ்வதே இனி எனது வழிப் பயணமாகும்.

*"மனைவி அமைவதெல்லாம் இறைவன் கொடுத்தவரம்"*

**என்றும் பிரியமான கணவன்**
**ச. சிவபாலன்**



அன்பு ..... இது எங்கும் இருக்கிறது
ஒவ்வொரு அணுவிலும் இருக்கிறது.
எல்லா இடங்களிலும் வெளிப்படுகிறது
இந்த எல்லையற்ற அன்பே
பிரபஞ்சத்தை இயக்கும் சக்தியாகவும் எல்லா இடங்களிலும்
காணும் சக்தியாகவும் உள்ளது.
இந்த சக்தி தான் கடவுள்

-விவேகானந்தர்-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம் நினைவுகளில் இனிய அம்மாவின் நினைவுத் துளிகள் சில ...!

"என்ன புண்ணியம் செய்தனை நெஞ்சமே" என வாழ்த்தும் வகையில் எங்களின் பெற்றோர்கள் மிகவும் அன்பானவர்கள் சிறப்பானவர்கள். அவர்களின் பிள்ளைகளாக பிறப்பதற்கு மிகவும் புண்ணியம் பண்ணியுள்ளோம். அதிலும் எங்கள் அன்னை அமரர் சறோஜாதேவி சிவபாலன் அவர்கள் நாங்கள் பிறந்த நாள் தொடக்கம் இறுதிவரை மிகவும் சிறந்த பொறுப்புள்ள அம்மாவாக விளங்கினார். எமது பிள்ளைப் பாராயம் தொடக்கம் அம்மா அதிகாலையிலேயே எழுந்து விடுவார். காலை உணவு, மதிய உணவு என இருவேளை உணவுகளையும் நாங்கள் நித்திரை விட்டு எழும்பும் முன் செய்து விடுவார். எழுந்ததும் குளிப்பாட்டி காலை உணவு ஊட்டி எங்களை அம்மம்மா வீட்டில் விட்டுவிட்டு பாடசாலை செல்வார். எங்கள் பாடசாலை வாழ்க்கை தொடங்கியதும் எங்களுக்கு காலை உணவுடன் டிபன் பொக்ஸ் நிரம்ப பொரியலும் விரும்பிய உணவும் தயாரிக்கப்பட்டுவிடும். அத்துடன் பாடசாலை சீருடை போடுவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருக்கும். புத்தகப்பை, தண்ணீர்ப் போத்தல் என்பன மேசை மேல் இருக்கும். இவ்வாறு நாங்கள் வளர வளர அன்னை மேல் அன்பும் வளர்ந்து வந்தது.

விரும்பிய பாடங்களைக் கற்கும் சுதந்திரம் தரப்பட்டது. தனியார் வகுப்புக்கள், பாடசாலை வகுப்புக்கள், மேலதிக விளையாட்டு நிகழ்வுகள் என நாங்கள் முன் நோக்கிச் செல்ல உரிய நேரத்தில் உண்ண உணவு, நன்கு தோய்த்து மடிக்கப்பட்ட உடை, போக்குவரத்து வசதிகள் என எல்லா வசதிகளையும் பார்த்துப் பார்த்து செய்தார். நாங்கள் வளர்ந்து பெரியவர்கள் ஆனதும் அப்பாவுடன் சேர்ந்து எமக்குப் பொருத்தமான வாழ்க்கைத் துணைகளைப் பெற்றுத் தந்தார். எங்கள் பிள்ளைகளை மிக அன்புடன் வளர்த்தார்கள். தன் மருமக்களை மகன்களாக அன்பு செலுத்தினார். அம்மா இறைவனிடம் மிகவும் பக்தி கொண்டவர். அருகில் உள்ள காளி கோவிலுக்கு அடிக்கடி சென்று வழிபட்டு வருவார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எங்கள் அம்மா, எங்களுக்கு மட்டுமல்ல தான் கற்பித்த பாடசாலையிலும் அன்புடன் ஓர் தாய் போல் நடந்து கொண்டார். மாணவர்களுக்கும் தேவையான பாடங்களை மேலதிக வகுப்புக்களில் மட்டுமல்லாது, வீட்டிற்கும் அழைத்து வந்து சொல்லிக் கொடுப்பார். அவர்களுக்கு தேவைப்பட்டால் கொப்பிகள், பென்சில்கள், பேனைகள் போன்றவற்றை வேண்டிக் கொடுப்பார்.

எங்கள் உறவினர்களுடனும், அயலவர்களுடனும் தெரிந்தவர்கள், தெரியாதவர்கள் என எல்லோருடனும் புன்சிரிப்புடனும் அமைதியுடனும், மிகுந்த பற்றுடனும் பழகுவார். யாரையும் குறை கூறமாட்டார், கோபமாகப் பேசமாட்டார், போகவிட்டு புறம் கூறமாட்டார். இப்பண்புகளால் அம்மாவை எல்லோரும் விரும்புவார்கள். அது எங்களுக்கு பெருமையாகவும், மகிழ்ச்சியாகவும் இருக்கும். இவ்வாறான பல சிறப்புக்களையும் கொண்ட எமது அம்மாவை இழந்தது மிகவும் சோகமானது. ஆயினும் உலக நியதி இது என்பதால் எங்களின் அம்மாவின் ஆத்மா சாந்தியடைய காளியம்பாளை வேண்டி நிற்கின்றோம்.

**என்றும் இனிய மகள்கள்**

**லக்ஷிதா, ஹம்ஷிதா**

**ஐயிரண்டு திங்களாய் அங்கமெல்லாம் நொந்து பெற்றுப்**
**பையலென்ற போதே பரிந்தெடுத்துச் – செய்ய இரு**
**கைப்புறத்தில் ஏந்தி கனக முலை தந்தாளை**
**எப்பிறப்பில் காண்பேன் இனி?**

- பட்டினத்தார் பாடல் -



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மருமக்கள் மனத்தினில் ...!

பாசம் கொண்டு அழைத்திடும் எங்கள் மாமி
நேசம் என்பதனை நித்தமும் உணர்த்திடுவீர்
பண்பின் உறைவிடமாய்ப் பாசத்தின் சுடராய்
அன்பின் அணிகலனாய் அமைதியின் பிறப்பிடமாய்
பாரில் உங்களைப் போல் ஒருவரை நாம் பார்த்ததில்லை
எங்களை வளமோடு வாழவைத்த அன்புருவம்
இன்று இவ் வையகத்தில் இல்லையென ஏங்குகின்றோம்
மண்ணுலகை விட்டு எம்மாமி மறைந்திட்டாலும்
எம் மனதில் என்றும் நீண்டு நிறைந்திருப்பார்.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி

மருமகன்கள்
**ப.சிவஞானவேல், நி.தீபன்**

## சிந்தனைக்கு ...

- நிகழ்கால கடமைகளைச் சரியாக செய்பவர்கள் மட்டுமே வருங்காலத்தில் தங்கள் இலட்சியத்தை அடைகின்றார்கள்.
- வெற்றியை ஒருபோதும் தலைக்குள் ஏற்றாதீர்கள், தோல்வியை ஒரு போதும் மனதிற்குள் புகவிடாதீர்கள்.
- திடீரென கருத்து மாறுவது என்பது ஆபத்தானது. ஆனால் குருட்டுத்தனமாக பழைய கொள்கைகளைப் பின்பற்றிக் கொண்டிருப்பது அதை விட ஆபத்தானது.
- புகழ் கூறப்படும்போது வானத்தில் பறக்காதீர்கள். இகழ் கூறப்படும் போது பூமிக்குள் புதைபடாதீர்கள்.
- உழைப்பைப்பற்றி எறும்பு எப்போதும் பேசிக் கொண்டிருப்பதில்லை, அது எப்போதும் உழைத்துக் கொண்டிருக்கின்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அம்மம்மா பற்றிய நினைவுத்துளிகளில் ...!

அம்மம்மா என்றழைக்க யாருமில்லை – இனி
அருகிருந்து எமையணைக்க யாருமில்லை.
சிறுமிகளாய் பல குறும்புகள் நாம் செய்தபோதும்
சினமேதும் இல்லாது சிரித்து மகிழ்திடுவீர்
கண்ணோரம் நீர் வந்து கலங்கி நின்றிருந்தால்
கண்ணே என அழைத்து கண்ணீர் துடைத்திடுவீர்
பொங்கல் தீபாவளி புதுவருடம் வரு மென்றால்
புத்தாடையுடன் பலகாரம் பரிசாய் அளித்திடுவீர்
எங்கு இனிக் காண்போம் என ஏங்குகின்றோம் அம்மம்மா!

**பேர்த்திகள்**
**பிரணவி, நர்த்தவி**

தொலைதூரம் நாம் இருந்த போதும் அம்மம்மா
நிதம் தொலைபேசி ஊடாக அருகிருப்போம்
அம்மம்மா எனத் தினமும் அழைத்திடுவோம்
அம்மாவின் அருகிருந்து கதைத்திடுவோம்
அம்மம்மா எங்கு சென்றீர் காணவில்லை
அம்மாவும் அழுகின்றார் அம்மம்மா

**பேர்த்தி, பேரர்கள்**
**பிரகதி, தர்மிக்,**
**கஜலக்ஷன்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் அகவல்



சீதக் களபச்செந்தா மரை பூம்
பாதச் சிலம்பு பலஇசை பாட
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்
வண்ண மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
பேழை வயிறும் பெரும்பாரக் கோடும்
வேழ முகமும் விழங்குசிந் தூரமும்
ஐந்து கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்
நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழொளி மார்பும்
சொற்பதங் கடந்த துரிய மெய்ஞ்ஞான
அற்புதநின்ற கற்பகக் களிறே
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழுதென்னை யாட்கொளவேண்டித்
தாயா யெனக்குத் தானெழுந் தருளி
மாயாப் பிறவி மயக்கம் மறுத்து
திருந்திய முதலைந் தெழுத்துந் தெளிவாய்
பொருந்தவே வந்தென் னுளந்தனிற்புகுந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குருவடி வாகிக் குவலயந் தன்னில்
திருவடி வைத்துத் திறமிது பொருளென
வாடாவகைதான் மகிழ்ந்தெனக்கருளிக்
கோடா யுதத்தால் கொடுவினை களைந்தே
உவட்டாவுபதேசம் புகட்டியென் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையுங் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் கருளி
கருவிகள் ஒடுங்கும் கருத்தறிவித்து
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலமொரு நான்குந் தந்தெனக் கருளி
மலமொரு மூன்றின் மயக்க மறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்
ஐம்புலக் கதவை அடைப்பதுங் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேரா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கபாலமும் காட்டி
மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்
நான்றெழு பாம்பின் நாவி லுணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய வசபை
விண்டெழு மந்திரம் வெளிப்பட உரைத்து
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலா லெழுப்புங் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்தனியக்கமும்
குமுத சகாயன் குணத்தையுங் கூறி
இடைச்சக் கரத்தின் ஈரெட்டு நிலையும்
உடற்சக் கரத்தின் உறுப்பையுங் காட்டி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சண்முக தூலமும் சதுர்முக சூட்சமும்
என்முக மாக இனிதெனக் கருளிப்
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரியெட்டு நிலையுந் தெரிசனப் படுத்தித்
கருத்தினிற் கபால வாயில் காட்டி
இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையின் முதலைக் களைந்தே
வாக்கும் மனமும் இல்லா மனோலயம்
தேக்கிய எந்தன் சிந்தை தெளிவித்து
இருள்வெளி இரண்டுற்கு ஒன்றிட மென்ன
அருள்தரும் ஆனந்தத்து அழுத்திஎன் செவியின்
எல்லை யில்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டி
சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டி
அணுவிற் கணுவாய் அப்பாலுக் கப்பாலாய்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே காட்டி
வேடமும் நீறும் விளங்க நிறுத்திக்
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி
அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கருத்தின் நிலையறிவித்துத்
தத்துவ நிலையைத் தந்தெனை யாண்ட
வித்தக விநாயக விரைகழல் சரணே.

(விநாயகர் அகவல் முற்றிற்று)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி விரதம் – நவராத்திரி



புரட்டாதி மாதம் வளர்பிறை பிரதமை முதல் நவமி முடியும் வரையுள்ள ஒன்பது இரவுகளும் தேவியை நினைத்து நோற்கும் நோன்பு நவராத்திரி விரதமாகும். ஒன்பது நாட்களிலும் முதல் மூன்று நாட்கள் வீரத்தை வேண்டித் துர்க்கையையும் அடுத்துவரும் மூன்று நாட்கள் செல்வத்தை வேண்டி திருமகளையும் இறுதி மூன்று நாட்கள் கல்வியை வேண்டி கலைமகளையும் பூசித்து விரதம் அனுஷ்டிப்பர். நோன்பு நோற்பவர்கள் பிரதமையில் எண்ணெய் முழுக்காடி நோன்பைத் தொடங்க வேண்டும். இவ்விரதம் அனுஷ்டிப்போர் முதல் எட்டு நாட்களும் ஒருவேளை உணவு உட்கொண்டு ஒன்பதாவது நாளாகிய மஹா நவமியில் உபவாசமிருத்தல் உத்தமம். இந்நோன்பு நாட்களில் அபிராமி அந்தாதி, சகலகலா வல்லிமாலை போன்ற பாடல்கள் பாராயணம் செய்யத்தக்கன.

## சரஸ்வதி அந்தாதி

ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என் நன்மை தூய
உருப் பளிங்கு போல் வாள் என் உள்ளத்தினுள்ளே
இருப்பள் இங்கு வாராது இடர்.

படிக நிறமும் பவளச் செவ்வாயும்
கடிகமழ்பூந் தாமரை போற் கையுந்
துடியிடையும் அல்லும் பகலும்
அனவரதம் துதித்தால் கல்லும் சொல்லாதோ கவி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சகலகலாவல்லிமாலை



வெண்டா மரைக்கன்றி நின் பதந்
தாங்கவென் வெள்ளையுள்ளத்
தண்டா மரைக்குத் தகாது கொ
லோசக மேழு மளித்
துண்டா னுறங்க வொழித்தான்பித்
தாகவுண்டாக்கும் வண்ணம்
கண்டான் சுவைகொள் கரும்பே
சகல கலாவல்லியே.

நாடும் பொருட்சுவை சொற்சுவை
தோய்தர நாற்கவியும்
பாடும் பணியிற் பணித்தருள்
வாய்பங்க யாசனத்திற்
கூடும் பசும்பொற் கொடியே
கனதனக் குன்றுமைம்பாற்
காடுஞ் சுமக்கும் கரும்பே
சகல கலாவல்லியே.

அளிக்குஞ் செழுந்தமிழ்த் தெள்ளமு
தார்ந்துன் னருட்கடலிற்
குளிக்கும் படிக்கென்று கூடுங்கொ
லோவுளங் கொண்டு தெள்ளித்
தெளிக்கும் பனுவற் புலவோர்
கவிமழை சிந்தக்கண்டு
களிக்குங் கலாப மயிலே
சகலகலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தூக்கும் பனுவற் றுறைதோய்ந்த
கல்வியுஞ் சொற்சுவை தோய்
வாக்கும் பெருகப் பணித்தருள்
வாய்வட நூற்கடலும்
தேக்குஞ் செழுந்தமிழ்ச் செல்வமுந்
தொண்டர்செந் நாவினின்று
காக்கும் கருணைக் கடலே
சகலகலாவல்லியே.

பஞ்சப் பிதந்தரு செய்யபொற்
பாதபங் கேருகமென்
நெஞ்சத் தடத்தல ராததென்
நேநெடுந் தாட்கமலத்
தஞ்சத் துவச முயர்ந்தோன்செந்
நாவு மகமும் வெள்ளைக்
கஞ்சத் தவிசொத் திருந்தாய்
சகலகலாவல்லியே.

பண்ணும் பரதமும் கல்வியுந்
தீஞ்சொற் பனுவலும்யான்
எண்ணும் பொழுதெளி தெய்த நல்
காயெழு தாமறையும்
விண்ணும் புவியும் புனலுங்
கனலும் வெங் காலுமன்பர்
கண்ணும் கருத்தும் நிறைந்தாய்
சகல கலாவல்லியே.

பாட்டும் பொருளும் பொருளாற்
பொருந்தும் பயனுமென்பாற்
கூட்டும் படிநின் கடைக்கணல்
காயுளங் கொண்டு தொண்டர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தீட்டுங் கலைத்தமிழ்த் தீம்பா
லமுதந்தெளிக்கும் வண்ணம்
காட்டும் வெள்ளோதிமப் பேடே
சகல கலாவல்லியே.

சொல்விற் பனமு மவதான
முங்கவி சொல்லவல்ல
நல்வித்தை யுந்தந் தடிமை கொள்
வாய்நளி னாசனஞ்சேர்
செல்விக் கரிதென் றொருகால
முஞ்சிதை யாமைநல்குங்
கல்விப் பெருஞ் செல்வப் பேறே
சகலகலாவல்லியே.

சொற்கும் பொருட்கு முயிராமெய்ஞ்
ஞானத்தின் தோற்றமென்ன
நிற்கின்ற நின்னை நினைப்பவர்
யார்நிலந் தோய்புழைக்கை
நற்குஞ்சரத்தின் பிடியோ
டரசன்ன நாணநடை
கற்கும் பதாம்புயத்தாளே
சகல கலாவல்லியே.

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பண்கண்டளவிற் பணியச்செய்
வாய்படைப் போன் முதலாம்
விண்கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வமுளதோ
சகல கலாவல்லியே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவவிரதம் – சிவராத்திரி



மாசி மாதத்துத் தேய்பிறைச் சதுர்த்தசித் திதியில் சிவபெருமானைக் குறித்து அனுஷ்டிக்கும் விரதம் சிவராத்திரி விரதமாகும். இந்நாளில் உபவாசம் இருப்பதுடன் இரவு முழுவதும் நித்திரையின்றி சிவபூஜையிலும் சிவவழிபாட்டிலும் ஈடுபடுதல் வேண்டும். உபவாசம் இருக்க இயலாதோர் நீரேனும் பாலேனும் உட்கொள்ளலாம். இரவு முழுவதும் இந்நாளில் விழித்திருக்க முடியாதவர்கள் பதின்நான்காவது நாழிகையில் வரும் இலிங்கோற்பவ காலம் வரையிலாயினும் விழித்திருத்தல் வேண்டும். இலிங்கோற்பவ காலத்தில் செய்யும் தரிசனமும் பூஜையும் பெரும் பலன் நிறைந்தன. இந்நாளில் சிவபுராணம் ஓதுதலும் கேட்டலும் சிறந்த பலனைத் தரும். உபவாசம் மேற்கொண்டோர் மறுநாட் காலையில் நித்திய கருமங்களை முடித்து சூரியோதய ஆறு நாளிகைக்குள்ளே சிவனடியாரோடு பாரணை பண்ணல் வேண்டும். பாரணை பண்ணிய பின் பகலிலே நித்திரை செய்தல் ஆகாது. (பாரணை – உபவாசத்திற்குப் பின் உட்கொள்ளும் உணவு)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிவபுராணம்

திருச்சிற்றம்பலம்

தொல்லையிரும் பிறவிச் சூழுந்தளை நீங்கி
அல்ல லறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னுந் தேன்.
நமச்சிவாய வாழ்க! நாதன் தாள் வாழ்க!
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள் வாழ்க
கோகழி ஆண்ட குருமணிதன் தாள் வாழ்க!
ஆகமம் ஆகிநின் றண்ணிப்பான் தாள் வாழ்க
ஏகன் அனேகன் இறைவனடி வாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடிவெல்க!
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்தன் பெய்கழல்கள் வெல்க!
புறத்தார்க்குச் சேயோன்றன் பூங்கழல்கள் வெல்க!
கரங்குவிவார் உண்மகிழுங் கோன் கழல்கள் வெல்க!
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன் கழல் வெல்க!
ஈசன் அடி போற்றி எந்தை அடி போற்றி
தேசன் அடி போற்றி சிவன்சேவடி போற்றி
நேயத்தே நின்ற நிமலன் அடிபோற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னன் அடி போற்றி
சீரார் பெருந்துறை நம்தேவன் அடி போற்றி
ஆராத இன்பம் அருளு மலை போற்றி
சிவன் அவன் என் சிந்தையுள் நின்ற அதனால்
அவன் அருளாலே அவன் தாள் வணங்கி
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினை முழுதும் ஓய உரைப்பன் யான்
கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எண்ணுதற்கெட்டா எழிலார்கழல் இறைஞ்சி
விண் நிறைந்து மண் நிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந்தெல்லை இலாதானே நின் பெருஞ்சீர்
பொல்லா வினையேன் புகழுமா றொன்றறியேன்
புல்லாகிப்பூடு ஆகி புழு வாய் மரமாகி
பல் விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்
வல்லசுரர் ஆகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லா அ நின்ற இத்தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்தி ளைத்தேன் எம்பெருமான்
மெய்யே உன் பொன் அடிகள் கண்டு இன்று வீடு உற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்காரமாய் நின்ற
மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா என ஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே!
வெய்யாய் தணியாய் இயமான நாம் விமலா
பொய் யாயின எல்லாம் போய கல வந்து அருளி
மெய்ஞ்ஞானம் ஆகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞானமில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானந்தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள் தருவாய்
போக்குவாய் என்னைப் புகுவிப்பாய் நின் தொழும்பின்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே!
மாற்ற மனங்கழிய நின்ற மறையோனே!
கறந்தபால் கன்னலொடு நெய் கலந்தாற்போலச்
சிறந்து அடியார் சிந்தனையுள் தேன் ஊறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்கள் ஓர் ஐந்து உடையாய் விண்ணோர்கள் ஏத்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங் கயிற்றாற் கட்டிப்
புறம் தோல் போர்த்து எங்கும் புழு அழுக்கு மூடி
மலம் சோரும் ஒன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலன் ஐந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந் துள்ளுருகும்
நலம் தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலம் தன் மேல் வந்தருளி நீள்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய்க் கிடந்த அடியேற்குத்!
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே!
மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச் சுடரே!
தேசனே தேனாரமுதே சிவபுரனே!
பாசமாம் பற்று அறுத்து பாரிக்கும் ஆரியனே!
நேச அருள் புரிந்து நெஞ்சில் வஞ்சம் கெடப்
பேராது நின்ற பெருங் கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கி என் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமாய் அல்லையுமாம்
சோதியனே துன் இருளே தோன்றாப் பெருமையனே!
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே
ஈர்த்தென்னை ஆட்கொண்ட எந்தை பெருமானே!
கூர்த்த மெய்ஞ்ஞானத்தாற் கொண்டுணர்வார்தங்கருத்தின்
நோக்கு அரிய நோக்கே நுணுக்கு அரிய நுண் உணர்வே
போக்கும் வரவும் புணர்வுமில்லாப்புண்ணியனே
காக்கும் எம் காவலனே காண் பரிய பேரொளியே
ஆற்றின்ப வெள்ளமே அத்தாமிக் காய் நின்ற



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தோற்றச் சுடர் ஒளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாந்
தேற்றனே தேற்றத் தெளிவே என் சிந்தனையுள்
ஊற்றான உன்னார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேன் எம் ஐயா அரனே ஓ என்றென்று
போற்றிப் புகழ்ந்து இருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டு இங்கு வந்து வினைப் பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பை கட்டழிக்க வல்லானே
நள்ளிருளில் நட்டம் பயின்றாடும் நாதனே
தில்லையுட் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓ என்று
சொல்லற்கு அரியானைச் சொல்லித் திருவடிக்கீழ்
சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கோளறு பதிகம்

திருச்சிற்றம்பலம்

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிகநல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேலணிந்தென்
உளமே புகுந்த அதனால்
ஞாயிறு திங்கள்செவ்வாய் புதன்வியாழன் வெள்ளி
சனிபாம்பி ரண்டு முடனே
ஆசறு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

என்பொடு கொம்பொடாமை யிவைமார் பிலங்க
எருதேறி யேழையுடனே
பொன்பொதி மத்தமாலை புனல்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஒன்பதொ டொன்றொடேழு பதினெட்டொ டாறும்
உடனாய நாள்க ளவைதாம்
அன்பொடு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

உருவளர் பவளமேனி ஒளிநீ றணிந்து
உமையோடும் வெள்ளை விடைமேல்
முருகலர் கொன்றைதிங்கள் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
திருமகள் கலையதூர்தி செயமாது பூமி
திசை தெய்வ மான பலவும்
அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

மதிநுதல் மங்கையோடு வடபாலி ருந்து
மறையோதும் எங்கள் பரமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நதியொடு கொன்றைமாலை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
கொதியுறு காலனங்கி நமனோடு தூதர்
கொடுநோய்க ளான பலவும்
அதிகுணம் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

நஞ்சணி கண்டன் எந்தை மடவாள் தனோடும்
விடையேறு நங்கள் பரமன்
துஞ்சிருள் வன்னிகொன்றை முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெஞ்சின அவுணரோடும் உருமிடியும் மின்னும்
மிகையான பூத மவையும்
அஞ்சிடும் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

வாள்வரி யதளதாடை வரிகோ வணத்தர்
மடவாள் தனோடு முடனாய்
நாண்மலர் வன்னிகொன்றை நதிசூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
கோளரி யுழுவையோடு கொலையானை கேழல்
கொடுநாக மோடு கரடி
ஆளரி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

செப்பிள முலைநன்மங்கை யொரு பாகமாக
விடையேறு செல்வ னடைவார்
ஒப்பிள மதியும்அப்பும் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
வெப்பொடு குளிரும்வாதம் மிகையான பித்தும்
வினையாக வந்து நலியா
அப்படி நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வேள்பட விழிசெய்தன்று விடமே லிருந்து
மடவாள் தனோடும் உடனாய்
வான்மதி வன்னிகொன்றை மலர்சூடி வந்தென்
உளமே புகுந்த அதனால்
ஏழ்கடல் சூழிலங்கை அரையன்ற னோடும்
இடரான வந்து நலியா
ஆழ்கடல் நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

பலபல வேடமாகும் பரனாரி பாகன்
பசுவேறும் எங்கள் பரமன்
சலமக ளோடெருக்கு முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
மலர்மிசை யோனும்மாலும் மறையோடு தேவர்
வருகால மான பலவும்
அலைகடல் மேருநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

கொத்தலர் குழலியோடு விசயற்கு நல்கு
குணமாய வேட விகிர்தன்
மத்தமும் மதியும்நாகம் முடிமே லணிந்தென்
உளமே புகுந்த அதனால்
புத்தரோ டமணைவாதில் அழிவிக்கும் அண்ணல்
திருநீறு செம்மை திடமே
அத்தகு நல்லநல்ல அவைநல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே.

தேனமர் பொழில் கொள்ஆலை விளைசெந்நெல்துன்னி
வளர்செம்பொன் எங்கும் நிகழ
நான்முகன் ஆதியாய பிரம்மா புரத்து
மறைஞான ஞான முனிவன்
தானுறு கோளும்நாளும் அடியாரை வந்து
நலியாத வண்ணம் உரைசெய்
ஆனசொல் மாலையோதும் அடியார்கள் வானில்
அரசாள்வர் ஆணை நமதே.

திருச்சிற்றம்பலம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தேவி விரதம் – கேதார கௌரி விரதம்



இவ்விரதம் புரட்டாதி மாத வளர்பிறை அட்டமித் திதியில் ஆரம்பமாகி ஐப்பசி மாதத் தேய்பிறைச் சதுர்த்தசியில் முடிவுறுகின்றது. இருபத்தொரு நாட்களைக் கொண்ட மஹோன்னத விரதம் இதுவாகும். உமாதேவியார் சிவனை நோக்கி பூஜை செய்து அர்த்த நாதீஸ்வரப் பேற்றினைப் பெற்ற விரதமாகையால் இது கேதார கௌரி விரதம் எனச் சொல்லப்பட்டது. மணமாகாத கன்னிப் பெண்கள் நல்ல மாங்கல்ய வாழ்வை வேண்டியும் மணமாகிய பெண்கள் தங்கள் மாங்கல்யம் தொடர்ந்தும் மங்களமாக இருக்க வேண்டியும் இவ்விரதத்தை நோற்பர். விரதம் ஆரம்பமான நாளிலிருந்து இருபத்தொரு இழைகளைக் கொண்ட நூலில் நாள்தோறும் ஒவ்வொரு முடிச்சாக இட்டு இறுதி நாளன்று அந்நூலை கோயில் குருக்களைக் கொண்டு ஆண்கள் தமது வலது கையிலும் பெண்கள் இடது கையிலும் அணிந்து கொள்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கேதாரகௌரி காப்பு



## விநாயகர் துதி

முன்னின்று செய்யுள் முறையாய்ப் புனைவதற்கு
என்னின்றருள் செய் எலிவாகனப் பிள்ளாய்
சொற்குற்றமொடு பொருட்குற்றம் சோர்வுதரும்
எக்குற்றமும் வாராமற் கா.

## வேண்டுதற் கூறு

காப்பெடுக்க வந்தேனே கௌரி அம்பாள் தாயாரே
காத்தென்னைத் தேற்றிடுவாய் காளிமகா தேவியரே
காலமெல்லாம் நின்னரிய காப்பெடுத்தே வாழ்ந்திடுவேன்
எண்ணும் கருமம் இனிதாக முடித்திடுவாய்
பண்ணும் வினையாவும் பனிபோலப் போக்கிடுவாய்
உண்ணும் உணவாக உயிரினுக்கு உயிராக
என்றும் இருந்தே எனைக்காத்து வந்திடுவாய்
காடும் கடந்து வந்தேன் மலையும் கடந்து வந்தேன்
காளிமகா தேவியரே காப்பெனக்குத் தந்திடுவாய்
சூலம் கொண்டவளே சுந்தரமுகத்தவளே
அரியை உடையவளே அம்மா காளிதாயே
கொடிய மகிஷாசுரனை கூறுபோட்டவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அசுரர்குணம் யாவும் அழிக்கும் சுடர்கொடியே
சிவனை நினைத்தல்லோ சீர்விரதம் நீயிருந்தாய்
பரனை நினைத்தல்லோ பதிவிரதம் நீயிருந்தாய்
அரனை நினைத்தல்லோ அம்மா நீ நோன்பிருந்தாய்
சங்கரனை எண்ணியல்லோ சங்கரி நீ நோன்பிருந்தாய்
ஐங்கரனைப் பெற்றவளே அன்று நீ நோன்பிருந்தாய்
விரதத்தைக் கண்டே விழித்தான் சிவனவனும்
அம்மா உமை அணைத்தே அருள்மாரி பொழிந்தானே
வகையாற்றுப் படலமிதை வழிவழியாய்க் காட்டிடுவீர்
நெறியறியாத் திகைப்போர்க்கு நெறிமுறையைக் காட்டிடுவாய்
காப்பைப் புனைந்துவிடு காலபயம் ஓட்டிவிடு
நூலைப் புனைந்துவிடு நுண்ணறிவை ஊட்டிவிடு
வல்லமையைத் தந்துவிடு வையகத்தில் வாழவிடு
காளிமகா தேவியரே காப்பருளுந் தேவியரே
காப்பைப் புனைபவளே காப்பாய் இருப்பவளே
நாடு செழிக்கவென்றே நற்காப்பு அருளுமம்மா
வீடு செழிக்கவென்றே விழைகாப்பு அருளுமம்மா
நல்வாழ்வு வாழ்வதற்கு நறுங்காப்பு அருளுமம்மா
அல்லல் அறுப்பதற்கே அருட்காப்பு அருளுமம்மா
பிள்ளை யற்றவர்க்குப் பெருங்காப்பு அருளுமம்மா
பூமணியே மாமணியே புனிதவதி தாயவளே
நான் விரும்பும் காப்பை நலமுடனே தாருமம்மா
கல்வி சிறப்பதற்கு கலைமகளே வாருமம்மா
செல்வம் சிறப்பதற்கு திருமகளே வாருமம்மா
வீரம் சிறப்பதற்கு வீரசக்தி தாருமம்மா
பாட்டுடைத் தலைவியரே பராசக்தித் தாயவளே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏட்டுடைத் தேவியரே எல்லாம்மிகு வல்லபையே
காப்பெடுக்க வந்தேனம்மா கனிவுடனே பாருமம்மா
பால் பழங்கள் வெற்றிலைகள் பல்வகைத் திரவியங்கள்
நானுமக்குத் தாறேனம்மா நயந்தென்னைக் காருமம்மா
காளி மகாதேவியரே காசினிக்கு வித்தவளே
வித்தை விதைப்பவளே வினைகாக்கும் காப்பவளே
எத்தால் வாழ்ந்திடுவோம் எல்லாம் உமதருளே
காசினியில் வேற்றுமையை கணப்பொழுதே மாற்றி விட்டால்
ஏசலின்றி வாழ்ந்திடுவோம் ஏத்து புகழ் தேவியளே
காப்பெனக்குப் போட்டுவிட்டால் கல்மனது இளகிவிடும்
ஞானம் பெருகிவரும் நல்வாழ்வு மிகுந்துவரும்
தொடர்ந்து அணிவோர்க்கு தொட்டதெல்லாம் ஜெயமாகும்
இசைந்து அணிவோர்க்கு நினைத்ததெல்லாம் ஈடேறும்
நம்பியணிவோர்க்கு நல்லதெல்லாம் பெருகிவரும்
நாள்கள் கோள்களெல்லாம் நலமுடனே இணைந்துவரும்
சந்தனச் சாந்தவளே சங்கரியே சாந்தினியே
குங்குமப் பூச்சவளே குலக்கொழுந்தே கௌரி அம்மா
காப்புக்கட்டிவிட்டுக் கடமை முடிந்ததென்று
ஏப்பம் மிகவிட்டு என்றுமே இருந்தறியேன்
நாளும் பொழுதிலெல்லாம் நறுங்காப்புக் கட்டதனில்
பூவும் நீருமிட்டுப் போற்றி வணங்கிடுவேன்
காலைப் பொழுதெழுந்து காப்பதனில் விழித்திடுவேன்
ஞானச் செழுஞ்சுடரே காளியுன்னைக் காணுகின்றேன்
காப்பெனக்குக் கையிலுண்டு கடமைகளைச் செய்திடுவேன்
ஏய்ப்பவரைக் கண்டால் எரிமலைபோல் கனற்றிடுவேன்
தீமைச் செயலெதுவும் தெரியாது செய்கையிலே



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காப்புக் கையிலிருந்து கண்திறந்து காட்டுமடி
சொல்லற் கரிதான சோதிமிகு காப்பதனை
இருபது  நாள்வரையில் இசைவோடு விரதமிரு
பக்திமனதுடனே பரவி அணிவோர்க்கு
சித்தியெலாம் தருவாள் சீர்பெருகு கௌரியவள்
முத்திக்கு வழியுமுண்டு முக்கால உணர்வுமுண்டு
எச்சகத்தி லோர்களெல்லாம் ஏற்றியெமைப் போற்றிடுவர்
சொற்சக்தி பொருட்சக்தி துலங்கி வந்திடவே
அச்சக்தி யெல்லாம் அருள்வாள் கௌரியவள்
கௌரி காப்பதனைக் காலம் தவறாமல்
முறையாய் அணிந்து வர முன்வினைகள் நீங்கிவர
ஞானம் ஓங்கிவர நல்லறிவு துலங்கிவர
தேவிமகா காளியரே தெவிட்டாத தீங்கனியே
காளியாய் வந்தமர்ந்த கௌரியே காப்பருளும்.

**'அம்பிகையை சரண் புகுந்தால் அதிக வரம் பெறலாம்"**





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுப்பிரமணிய விரதம் – கந்த சஷ்டி



ஐப்பசி மாதம் அமாவாசைக்கு அடுத்த பிரதமை முதல் சஷ்டி வரையுள்ள ஆறு நாட்களும் அனுஷ்டிக்கும் விரதம் இதுவாகும். பிரதமையில் சிவபெருமானது நெற்றியிலிருந்து தெறித்த பொறிகள் ஆறும் சரவணப் பொய்கையில் ஆறுருவாக அதனை உமாதேவியார் எடுக்க ஆறு திருமுகமும் பன்னிரு திருக்கைகளும் கொண்டு ஓருருவாய் முருகப் பெருமான் எழுந்தருளிய நாள் சஷ்டியாகும். சூரபதுமனை சங்காரம் செய்த நாளும் இதுவேயாகும்.

ஒவ்வொரு நாளும் காலையில் நீராடி முருகப் பெருமானை வழிபட்டு சிறிதளவு நீர் மட்டும் அருந்தி ஆறு நாட்களும் உபவாசம் இருந்து ஏழாம் நாள் சிவனடியார்களுடன் பாரணை செய்வது இவ்விரதத்தின் நியமமாகும். இதற்கு இயலாதவர்கள் முதல் ஐந்து நாட்களும் ஒரு பொழுது உண்டு சஷ்டியில் உபவாசம் செய்யலாம். இவ்விரதத்தை ஆறு ஆண்டுகள் தொடர்ந்து அனுஷ்டிக்க வேண்டும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கந்தசஷ்டி கவசம்



## காப்பு

### நேரிசை வெண்பா

துதிப்போர்க்கு வல்வினைபோம் துன்பம் போம் நெஞ்சிற்
பதிப்போர்க்குச் செல்வம் பலித்துக் கதித்(து) ஓங்கும்
நிஷ்டையுங் கைகூடும் நிமலர் அருள் கந்தர்
சஷ்டி கவசந்தனை.

### குறள் வெண்பா

அமரர் இடர்தீர அமரம் புரிந்த குமரன்

அடி நெஞ்சே குறி.

### நூல்

சஷ்டியை நோக்கச் சரவண பவனார்
சிஷ்டருக் குதவுஞ் செங்கதிர் வேலோன்
பாதமிரண்டில் பண்மணிச் சதங்கை
கீதம் பாடக் கிண்கிணி யாட
மையல் நடஞ்செயும் மயில்வா கனனார்
கையில்வே லால்எனைக் காக்கவென் றுவந்து
வரவர வேலா யுதனார் வருக
வருக வருக மயிலோன் வருக


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்திரன் முதலா எண்டிசை போற்ற
மந்திர வடிவேல் வருக வருக
வாசவன் மருகா வருக வருக
நேசக் குறமகள் நினைவோன் வருக
ஆறுமுகம் படைத்த ஐயா வருக
நீறிடும் வேலவன் நித்தம் வருக
சிரகிரி வேலவன் சீக்கிரம் வருக
சரவண பவனார் சடுதியில் வருக
ரவண பவச ரரரர ரரர
ரிவண பவச ரிரிரிரி ரிரிரி
விணபவ சரவண வீரா நமோ நம
நிபவ சரவண நிறநிற நிறென
வசர வணப வருக வருக
அசுரர்குடி கெடுத்த ஐயா வருக
என்னை ஆளும் இளையோன் கையில்
பன்னிரண் டாயுதம் பாசஅங் குசமும்
பரந்த விழிகள் பன்னிரண் டிலங்க
விரைந்தெனைக் காக்க வேலோன் வருக
ஐயும் கிலியும் அடைவுடன் சௌவும்
உய்யொளி சௌவும் உயிரையுங் கிலியும்
கிலியுஞ் சௌவும் கிளரொளி யையும்
நிலைபெற் றென்முன் நித்தமும் ஒளிரும்
சண்முகன் தீயும் தனியொளி யொவ்வும்
குண்டலி யாம்சிவ குகன்தினம் வருக
ஆறு முகமும் அணிமுடி ஆறும்
நீறிடு நெற்றியும் நீண்ட புருவமும்
பன்னிரு கண்ணும் பவளச் செவ்வாயும்
நன்னெறி நெற்றியில் நவமணிச் சுட்டியும்
ஈராறு செவியில் இலகுகுண் டலமும்
ஆறிரு திண்புயத் தழகிய மார்பில்
பல்பூஷணமும் பதக்கமும் தரித்து
நன் மணிபூண்ட நவரத்ன மாலையும்
முப்புரி நூலும் முத்தணி மார்பும்
செப்பழ குடைய திருவயிறு உந்தியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

துவண்ட மருங்கில் சுடரொளிப் பட்டும்
நவரத்னம் பதித்த நற்சீ ராவும்
இருதொடை அழகும் இணைமுழந் தாளும்
திருவடி யதனில் சிலம்பொலி முழங்க
செககண செககண செககண செகண
மொகமொக மொகமொக மொகமொக மொகன
நகநக நகநக நகநக நகென
டிகுகுண டிகுடிகு டிகுகுண டிகுண
ரரரர ரரரர ரரரர ரரர
ரிரிரிரி ரிரிரிரி ரிரிரிரி ரிரிரி
டுடுடு டுடுடு டுடுடு டுடு
டகுடகு டிகுடிகு டங்கு டிங்குகு
விந்து விந்து மயிலோன் விந்து
முந்து முந்து முருகவேள் முந்து
என்தனை யாளும் ஏரகச் செல்வ
மைந்தன் வேண்டும் வர மகிழ்ந் துதவும்
லாலா லாலா லாலா வேசமும்
லீலா லீலா லீலா விநோதனென்று
உன்திரு வடியை உறுதியென் றெண்ணும்
என்தலை வைத்துன் இணையடி காக்க
என்னுயிர்க் குயிராம் இறைவன் காக்க
பன்னிரு விழியால் பாலனைக் காக்க
அடியேன் வதனம் அழகுவேல் காக்க
பொடிபுனை நெற்றியைப் புனிதவேல் காக்க
கதிர்வேல் இரண்டும் கண்ணினைக் காக்க
விழிசெவி யிரண்டும் வேலவர் காக்க
நாசிக ளிரண்டும் நல்வேல் காக்க
பேசிய வாய்தனைப் பெருவேல் காக்க
முப்பத் திருபல் முனைவேல் காக்க
செப்பிய நாவைச் செவ்வேல் காக்க
கன்னமி ரண்டும் கதிர்வேல் காக்க
என்னிளங் கழுத்தை இனியவேல் காக்க
மார்பை இரத்தின வடிவேல் காக்க
சேரிள முலைமார் திருவேல் காக்க



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வடிவே லிருதோள் வளம்பெறக் காக்க
பிடரிக ளிரண்டும் பெருவேல் காக்க
அழகுடன் முதுகை அருள்வேல் காக்க
பழுபதி னாறும் பருவேல் காக்க
வெற்றிவேல் வயிற்றை விளங்கவேல் காக்க
சிற்றிடை அழகுறச் செவ்வேல் காக்க
நாணாங் கயிற்றை நல்வேல் காக்க
ஆண் குறி இரண்டும் அயில்வேல் காக்க
பிட்ட மிரண்டும் பெருவேல் காக்க
வட்டக் குதத்தை வடிவேல் காக்க
பணைத்தொடை யிரண்டும் பருவேல் காக்க
கணைக்கால் முழந்தாள் கதிர்வேல் காக்க
ஐவிரல் அடியினை அருள்வேல் காக்க
கைக ளிரண்டும் கருணைவேல் காக்க
முன்கை யிரண்டும் முரண்வேல் காக்க
பின்கை யிரண்டும் பின்னவள் இருக்க
நாவில் சரஸ்வதி நற்றுணை யாக
நாபிக் கமலம் நல்வேல் காக்க
முப்பால் நாடியை முனைவேல் காக்க
எப்பொழு தும்எனை எதிர்வேல் காக்க
அடியேன் வசனம் அசைவுள நேரம்
கடுகவே வந்து கனகவேல் காக்க
வரும்பகல் தன்னில் வச்சிரவேல் காக்க
அரையிருள் தன்னில் அனையவேல் காக்க
ஏமத்திற் சாமத்தில் எதிர்வேல் காக்க
தாமதம் நீக்கிச் சதுர்வேல் காக்க
காக்க காக்க கனகவேல் காக்க
நோக்க நோக்க நொடியில் நோக்க
தாக்க தாக்க தடையறத் தாக்க
பார்க்க பார்க்க பாவம் பொடிபட
பில்லி சூனியம் பெரும்பகை அகல
வல்ல பூதம் வலாஷ்டிகப் பேய்கள்
அல்லற் படுத்தும் அடங்கா முனியும்
பிள்ளைகள் தின்னும் புழக்கடை முனியும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொள்ளிவாய்ப் பேய்களும் குறளைப் பேய்களும்
பெண்களைத் தொடரும் பிரமராட் சதரும்
அடியனைக் கண்டால் அலறிக் கலங்கிட
இரிசிகாட் டேரி இத்துன்ப சேனையும்
எல்லிலும் இருட்டிலும் எதிர்ப்படும் அண்ணரும்
கனபூசை கொள்ளும் காளியோ டனைவரும்
விட்டாங் காரரும் மிகுபல பேய்களும்
தண்டியக் காரரும் சண்டா ளர்களும்
என்பெயர் சொல்லவும் இடிவிழுந் தோடிட
ஆனை அடியினில் அரும்பா வைகளும்
பூனை மயிரும் பிள்ளைகள் என்பும்
நகமும் மயிரும் நீண்முடி மண்டையும்
பாவைக ளுடனே பலகல சத்துடன்
மனையிற் புதைத்த வஞ்சனை தனையும்
ஒட்டியச் செருக்கும் ஒட்டியப் பாவையும்
காசும் பணமும் காவுடன் சோறும்
ஓதுமஞ் சனமும் ஒருவழிப் போக்கும்
அடியனைக் கண்டால் அலைந்து குலைந்திட
மாற்றார் வஞ்சகர் வந்து வணங்கிட
காலதூதரெனைக் கண்டாற் கலங்கிட
அஞ்சி நடுங்கிட அரன்று புரண்டிட
வாய்விட் டலறி மதிகெட் டோட
படியினில் முட்டப் பாசக் கயிற்றால்
கட்டுடன் அங்கம் கதறிடக் கட்டு
கட்டி உருட்டு கால்கை முறியக்
கட்டு கட்டு கதறிடக் கட்டு
முட்டு முட்டு முழிகள் பிதுங்கிட
செக்கு செக்கு செதில்செதி லாக
சொக்கு சொக்கு சூர்ப்பகைச் சொக்கு
குத்து குத்து கூர்வடி வேலால்
பற்று பற்று பகலவன் தணலெரி
தணலெரி தணலெரி தணலது வாக
விடுவிடு வேலை வெருண்டது வோடப்
புலியும் நரியும் புன்னரி நாயும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எலியும் கரடியும் இனித்தொடர்ந்தோடத்
தேளும் பாம்பும் செய்யான் பூரான்
கடிவிட விஷங்கள் கடித்துய ரங்கம்
ஏறிய விஷங்கள் எளிதினில் இறங்க
ஒளிப்புஞ் சுளுக்கும் ஒருதலை நோயும்
வாதஞ் சயித்தியம் வலிப்புப் பித்தம்
சூலைசயம் குன்மம் சொக்குச் சிரங்கு
குடைச்சல் சிலந்தி குடல்விப் பிரிதி
பக்கப் பிளவை படர்தொடை வாழை
கடுவன் படுவன் கைத்தாள் சிலந்தி
பற்குத்து அரணை பருவரை யாப்பும்
எல்லாப் பிணியும் என்றனைக் கண்டால்
நில்லா தோட நீஎனக் கருள்வாய்
ஈரேழ் உலகமும் எனக்குற வாக
ஆணும் பெண்ணும் அனைவரும் எனக்கா
மண்ணா ளரசரும் மகிழ்ந்துற வாகவும்
உன்னைத் துதிக்க உன் திருநாமம்
சரவண பவனே சையொளி பவனே
திரிபுர பவனே திகழொளி பவனே
பரிபுர பவனே பவமொளி பவனே
அரிதிரு மருகா அமரா பதியைக்
காத்துத் தேவர்கள் கடுஞ்சிறை விடுத்தாய்
கந்தா குகனே கதிர் வேலவனே!
கார்த்திகை மைந்தா கடம்பா கடம்பனை
இடும்பனை யழித்த இனியவேல் முருகா
தணிகா சலனே சங்கரன் புதல்வா
கதிர்கா மத்துறை கதிர்வேல் முருகா
பழனிப் பதிவாழ் பால குமாரா
ஆவினன் குடிவாழ் அழகிய வேலா
செந்தின்மா மலையுறும் செங்கல்வ ராயா
சமரா புரிவாழ் சண்முகத் தரசே
காரார் குழலாள் கலைமகள் நன்றாய்
என்நா இருக்க யானுனைப் பாட
எனைத்தொடர்ந் திருக்கும் எந்தை முருகனைப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாடினேன் ஆடினேன் பரவச மாக
ஆடினேன் நாடினேன் ஆவினன் பூதியை
நேச முடன்யான் நெற்றியில் அணியப்
பாச வினைகள் பற்றது நீங்கி
உன்பதம் பெறவே உன்னரு ளாக
அன்புடன் ரட்ஷி அன்னமுஞ் சொன்னமும்
மெத்த மெத்தாக வேலாயுதனார்
சித்திபெற் றடியேன் சிறப்புடன் வாழ்க
வாழ்க வாழ்க மயிலோன் வாழ்க
வாழ்க வாழ்க வடிவேல் வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குரு வாழ்க
வாழ்க வாழ்க மலைக்குற மகளுடன்
வாழ்க வாழ்க வாரணத் துவசம்
வாழ்க வாழ்கஎன் வறுமைகள் நீங்க
எத்தனை குறைகள் எத்தனை பிழைகள்
எத்தனை யடியேன் எத்தனை செய்யினும்
பெற்றவன் நீகுரு பொறுப்ப துன்கடன்
பெற்றவள் குறமகள் பெற்றவ ளாமே
பிள்ளையென் றன்பாய்ப் பிரிய மளித்து
மைந்தனென் மீதுன் மனமகிழ்ந் தருளித்
தஞ்சமென் றடியார் தழைத்திட அருள்செய்
கந்தர் சஷ்டிக் கவசம் விரும்பிய
பாலன் தேவ ராயன் பகர்ந்ததைக்
காலையில் மாலையில் கருத்துடன் நாளும்
ஆசா ரத்துடன் அங்கந் துலக்கி
நேச முடனொரு நினைவது வாகிக்
கந்தர் சஷ்டிக் கவச மிதனைச்
சிந்தை கலங்காது தியானிப் பவர்கள்
ஒருநாள் முப்பத் தாறுருக் கொண்டு
ஓதியே செபித்து உகந்து நீறணிய
அட்டதிக் குள்ளோர் அடங்கலும் வசமாய்த்
திசைமன்னர் எண்மர் சேர்ந்தங்க ருளுவர்
மாற்றவ ரெல்லாம் வந்து வணங்குவர்
நவகோள் மகிழ்ந்து நன்மை யளித்திடும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நவமத னெனவும் நல்லெழில் பெறுவர்
எந்த நாளும் ஈரெட்டாய் வாழ்வர்
கந்தர்கை வேலாம் கவசத் தடியை
வழியாய்க் காண மெய்யாய் விளங்கும்
விழியாற் காண வெருண்டிடும் பேய்கள்
பொல்லா தவரை பொடிபொடி யாக்கும்
நல்லோர் நினைவில் நடனம் புரியும்
சர்வ சத்துரு சங்கா ரத்தடி
அறிந்தென துள்ளம் அட்டலட்சுமிகளில்
வீரலட்சுமிக்கு விருந்துண வாகச்
சூரபத் மாவைத் துணித்தகை யதனால்
இருபத் தேழ்வர்க்கு உவந்தமு தளித்த
குருபரன் பழனிக் குன்றினி லிருக்கும்
சின்னக் குழந்தை சேவடி போற்றி
எனைத்தடுத் தாட்கொள என்றன துள்ளம்
மேவிய வடிவுறும் வேலவா போற்றி
தேவர்கள் சேனா பதியே போற்றி
குறமகள் மனமகிழ் கோவே போற்றி
திறமிகு திவ்விய தேகா போற்றி
இடும்பா யுதனே இடும்பா போற்றி
கடம்பா போற்றி கந்தா போற்றி
வெட்சி புனையும் வேலே போற்றி
உயர்கிரி கனக சபைக்கோ ரரசே
மயில்நட மிடுவோய் மலரடி சரணம்
சரணஞ் சரணஞ் சரவண பவஓம்
சரணஞ் சரணஞ் சண்முகா சரணம்

முற்றும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் விரதம் – பிள்ளையார் கதை



விநாயகர் விரதம் என்பது பிள்ளையாரை நினைத்து அவர் அருள் வேண்டி அனுஷ்டிக்கும் விரதமாகும். பிள்ளையார் கதை கார்த்திகை மாதக் கார்த்திகை நட்சத்திரம் கழிந்த மறுநாள் ஆரம்பித்து இருபத்தொராவது நாளாகிய சதய நட்சத்திரமும் சஷ்டி திதியும் கூடிய நாளில் நிறைவுறும். இந்நாள் விநாயகப் பெருமான் கஜமுகாசுரனை சங்காரம் செய்த நாளாகும்.

விரதகாலத்தில் பிள்ளையார் புராணத்தைக் கோயில்களில் படித்துப் பயன் சொல்வது பண்டு தொட்டு வரும் மரபாகும். இம் மரபினை ஒட்டிப் பிள்ளையாரின் பெருமைகளையும் இவ்விரதத்தை அனுஷ்டிப்பதால் வரும் பயன்களையும் விளக்குவது பிள்ளையார் கதையாகும். இவ்விரதத்தை நோற்போரும் இவ்விரதகாலத்தில் பிள்ளையார் கதையைப் படிப்போரும் கேட்போரும் இப்புவியில் தாம் விரும்பும் அனைத்து ஐஸ்வரியமும் பெற்று நல்வாழ்வு வாழ்வர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# விநாயகர் கதை



## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன் மேல் – அருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியேயிக் கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவ தனிலேறி
வரும் அரன்றான் ஈன்றருளும் மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## விநாயகர் துதி

திருவாக்குஞ் செய்கருமங் கைகூட்டுஞ் செஞ்சொற்
பெருவாக்கும் பீடும் பெருக்கும் – உருவாக்கும்
ஆதலால் வானோரும் ஆனை முகத்தோனைக்
காதலாற் கூப்புவர்தம் கை.

ஒற்றை மருப்பும் ஓரிரண்டு கைத்தலமும்
வெற்றி புனைந்த விழிமூன்றும் – பெற்றதொரு
தண்டைக்கால் வாரணத்தைத் தன் மனத்தில் எப்பொழுதுங்
கொண்டக்கால் வராது கூற்று.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாலுந் தெளிதேனும் பாகும் பருப்புமிவை
நாலும் கலந்து உனக்கு நான்தருவேன் – கோலஞ்செய்
துங்கக் கரிமுகத்துத் தூமணியேநீ யெனக்குச்
சங்கத் தமிழ் மூன்றுந்தா

## சப்பாணி

எள்ளு பொரிதேன் அவல் அப்பமிக்கும் பயறும் இளநீரும்
வள்ளிக்கிழங்கும் மாம்பழமும் வாழைப்பழமும் பலாப்பழமும்
வெள்ளைப்பாலும் மோதகமும் விரும்பிப்படைத்தேன் சந்நிதியில்
கொள்ளைக் கருணைக் கணபதியே கொட்டி அருள்க சப்பாணி.
சண்டப் பெருச்சாளி ஏறிச் சடைகொண்டு வையத் துலாவி
அண்டத்து அமரர் துதிக்க அடியார்க்கு அருளும் பிரானே
எண்திக்கும் அன்பர்கள் பார்க்க இணையற்ற பேரொளி வீசக்
குண்டைக் கணபதி நம்பி கொடுங்கையாற் சப்பாணி கொட்டே.

## சரஸ்வதி துதி

புத்தகத் துள்ளுறை மாதே பூவில் அமர்ந்திடு வாழ்வே
வித்தகப் பெண்பிள்ளாய் நங்காய் வேதப் பொருளுக்கு இறைவீ
முத்தின் குடை உடையாளே மூவுலகுந் தொழுது ஏத்துஞ்
செப்புக் கவித்த முலையாய் செவ்வரி ஓடிய கண்ணாய்
தக்கோலந் தின்னும் வாயாய் சரஸ்வதி என்னுந் திருவே
எக்காலமும் உன்னைத் தொழுவேன் இயல் இசை நாடகம் என்னும்
முத்தமிழ்க் கல்விகள் எல்லாம் முழுதும் எனக்கருள் செய்து என்
சித்தம் தனில் நீ இருந்து திருவருள் செய்திடுவாயே.

## அதிகாரம்

பொன்னிறங் கடுக்கும் புனற்செறி குடுமித்
தென்மலை இருந்த சீர்சால் முனிவன்
கந்த மும்மதக் கரி முகன் கதைதனைச்
செந்தமிழ் வகையால்தெளிவு றச் செப்பினன்
அன்னதிற் பிறவில் அரி ல்தபத் திரட்டித்
தொன்னெறி விளங்கச் சொல்லுவன் கதையே.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கதை

மந்தர கிரியில் வடபால் ஆங்கு ஓர்
இந்துதவழ் சோலை இராசமா நகரியில்
அந்தணன் ஒருவனும் ஆயிழை ஒருத்தியுஞ்
சுந்தரப் புதல்வரைப் பெறுதல் வேண்டிக்
கடவுள் ஆலயமுங் கடிமலர்ப் பொய்கையும்
தடநிழற் பள்ளியுந் தாம்பல சமைத்துப்
புதல்வரைத் தருகெனப் பொருப்பு அரசு ஈன்ற
மதர்விழி பாகனை வழிபடும் நாளில்
மற்றவர் புரியும் மாதவங் கண்டு
சிற்றிடை உமையாள் சிவனடி வணங்கிப்
பரனே சிவனே பல்லுயிர்க்கு உயிரே
அரனே மறையவற்கு அருள்புரிந்து அருளென
அந்த அந்தணனுக்கு இந்த நற்பிறப்பில்
மைந்தரில்லை என்று மறுத்து அரன் உரைப்ப
எப்பரி சாயினும் எம்பொருட்டு ஒரு சுதன்
தப்பிலா மறையோன் தனக்கு அருள் செய்கென
எமை ஆளுடைய உமையாள் மொழிய
இமையா முக்கண் இறைவன் வெகுண்டு
பெண்சொற் கேட்டல் பேதைமை என்று
பண்சொற் பயிலும் பாவையை நோக்கிப்
பேதாய் நீ போய்ப் பிறவென மொழிய
மாதுமை அவளும் மனந்தளர்வு உற்றுப்
பொன்றிடு மானுடப் புன்பிறப்பு எய்துதல்
நன்றல என்றே நடுக்கமுற்று உரைப்பக்
கறைமிடற்று அண்ணல் கருணை கூர்ந்து
பிறைநுதல் அவட்கு நீ பிள்ளை யாகச்
சென்று அவண் வளர்ந்து சிலபகல் கழித்தால்
மன்றல் செய்தருள்வோம் வருந்தலை என்று
விடைகொடுத்து அருள விலங்கல் மாமகளும்
பெடைமயிற்சாயற் பெண்மக வாகித்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தார்மலி மார்பன் சதுர்மறைக் கிழவன்
சீர்மலி மனைவி திருவயிற்று உதித்துப்
பாவையுஞ் சிற்றிலும் பந்தொடு கழங்கும்
யாவையும் பயின்ற இயல்பினள் ஆகி
ஐயாண்டு அடைந்த பின் அன்னையும் அத்தனும்
மையார் கருங்குழல் வாணுதல் தன்னை
மானுட மறையோர்க்கு வதுவை செய்திடக்
கான்அமர் குழலியைக் கருதிக் கேட்பப்
பிறப்பு இறப்பு இல்லாப் பெரியோற்கு அன்றி
அறத்தகு வதுவைக்கு அமையேன் யான் என
மற்றவன் தன்னை உன் மணமகனாகப்
பெற்றிடல் அரிதெனப் பெயர்த்து அவர் பேச
அருந்தவ முயற்சியால் அணுகுவேன் யானெனக்
கருந்தட நெடுங்கண் கவுரி அங்கு உரைப்ப
மருமலி கமல மலர்த்தடத்து அருகில்
தருமலி நிழல் தவச் சாலையது அமைத்துப்
பணியணி பற்பல பாங்கியர் சூழ
அணிமலர்க் குழல் உமை அருந்தவம் புரிதலும்
அரிவை தன் அருந்தவம் அறிவோம் யாமென
இருவரும் அறியா இமையவர் பெருமான்
மான் இடம் ஏந்தும் வண்ணமது ஒழிந்து
மானிட யோக மறைவன் ஆகிக்
குடையொடு தண்டு நற்குண்டிகை கொண்டு
மடமயில் தவம்புரி வாவிக் கரையிற்
கண்ணுதல் வந்து கருணை காட்டித்
தண்நறுங் கூந்தல் தையலை நோக்கி
மின்பெறு நுண்ணிடை மெல்லியலாய் நீ
என்பெறத் தவமிங்கு இயற்றுவது என்றலுங்
கொன்றை வார்சடையனைக் கூட என்று உரைத்தலும்
நன்று எனச் சிரித்து நான்மறை யோனும்
மாட்டினில் ஏறி மான் மழுத் தரித்துக்
காட்டினிற் சுடலையிற் கணத்துடன் ஆடிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பாம்பும் எலும்பும் பல்தலை மாலையுஞ்
சாம்பரும் அணிந்து தலையோடு ஏந்திப்
பிச்சை கொண்டு உழலும் பித்தன் தன்னை
நச்சி நீர் செய்தவம் நகைதரும் நுமக்கெனப்
பூங்கொடி அருந்தவம் பூசுரன் குலைத்தலும்
ஆங்கு அவள் நாணமுற்று அணிமனை புகுதச்
சேடியர் வந்து செழுமலர்க் குழலியை
வாடுதல் ஒழிகென மனமிகத் தேற்றிச்
சிந்துர வாள்நுதற் சேடியர் சிலர்போய்த்
தந்தை தாயிருவர் தாளினை வணங்கி
வாவிக் கரையில் வந்தொரு மறையோன்
பாவைதன் செங்கையைப் பற்றினன் என்றலுந்
தோடு அலர்கமலத் தொடைமறை முனியை
ஆடக மாடத்து அணிமனை கொணர்க என
மாடக யாழ்முரல் மங்கையர் ஓடி
நீடிய புகழாய் நீ எழுந்து அருள் என
மைம்மலர்க் குழலி வந்து எனை அழைக்கில்
அம்மனைப் புகுவன் என்று அந்தணன் உரைத்தலும்
பொற்றொடி நீ போய்ப் பொய்கையில் நின்ற
நற்றவ முனியை நடாத்திக் கொணர்கென
சிவனை இகழ்ந்த சிற்றறிவுடையோன்
அவனையான் சென்றிங்கு அழைத்திடேன் என்று
சிற்றிடை மடந்தையுஞ் சீறினளாகி
மற்றைய மாதர் மதிமுகம் நோக்கி
நெற்றியிற் கண்ணுடை நிமலனுக்கு அல்லவென்
பொற்புஅமர் கொங்கை பொருந்துதற்கு அரிதால்
மானிட வேட மறையவன் தனக்கு
யான் வெளிப்படுவதில்லை என்று இசைப்ப
மனையிடை வந்த மாமுனி தன்னை இணையடி
தொழுதல் இளையோர்க்கு இயல்பெனத்
தந்தையுந் தாயுந் தகைபெற மொழியச்
சிந்தை குளிர்ந்து சீறுதல் ஒழிந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தாய் சொல்மறுத்தல் பாவமென்று அஞ்சி
ஆயிழை தானும் அவனெதிர் சென்று
சுற்றிவந்து அவனடி சுந்தரி வணங்கி
மற்றவன் தன்னை மனையிற் கொணர்ந்து
ஆதியம் பகவற்கு அன்பன் ஆகும்
வேதியன் பழைய விருத்தன் என்றெண்ணி
ஆசனம் நல்கி அருக்கியம் முதலாப் பாத
பூசனைகள் பண்ணிய பின்னர்ப்
போனகம் படைத்துப் பொரிக்கறி பருப்புநெய்
ஆன்பால் மாங்கனி அழகிய பலாச்சுளை
தேன் கதலிப்பழம் சீர்பெறப் படைத்து
அந்தணன் தன்னை அமுது செய்வித்துச்
சந்தனங் குங்குமச் சாந்திவை கொடுத்துத்
தக்கோலத்தொடு சாதிக் காயும்
கற்பூரத்தொடு கவின்பெறக் கொண்டு
வெள்ளிலை அடைக்காய் விளங்கிய பொன்னின்
ஒள்ளிய தட்டில் உகந்து முன்வைத்துச்
சிவனெனப் பாவனை செய்து நினைந்து
தவமுறை முனிவனைத் தாளிணை வணங்கத்
தேனமர் குழலி திருமுகம் நோக்கி
மோனமாமுனி புன்முறுவல் காட்டிக்
கற்றைச் சடையுங் கரமொரு நான்கும்
நெற்றியில் நயனமும் நீல கண்டமும்
மானும் மழுவும் மலர்க்கரத்து இலங்கக்
கூன்மதி நிலவும் கொழித்திட முடிமேல்
வரந்தரு முதல்வன் மடமயில் காணக்
கரந்ததன் உருவங் காட்டி முன்நிற்ப
மரகத மேனி மலைமகள் தானும்
விரைவொடு அங்கு அவன் அடி வீழ்ந்து இறைஞ்சினளே
அரிஅயன் இந்திரன் அமரர் விஞ்சையர்
கருடர் கின்னரர் காய வாசியர்
ஏதமில் முனிவர் அவுணர் இராக்கதர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூதர் இயக்கர்கிம் புருடர் அலகை
சித்தர் தாரகை கந்தர்வர்கள் முதலாய்க்
கணிக்கரும் பதினெண் கணத்தில் உள்ளவரும்
மணிக்கருங் களத்தனை வந்தடைந்து அதன்பின்
மன்றல் அங் குழலிக்கு வதுவைநாள் குறித்துத்
தென்றல் வந்துஇலங்கு முன்றில் அகத்துப்
பொன்திகழ் பவளப் பொற்கால் நாட்டி
மாணிக்கத்தால் வளை பல பரப்பி
ஆணிப்பொன் தகட்டால் அழகுற வேய்ந்து
நித்தில மாலை நிரைநிரை தூக்கிப்
பக்திகள் தோறும் பலமணி பதித்துத்
தோரணம் நாட்டித் துகில் விதானித்துப்
பூரணப் பொற்குடம் பொலிவுற வைத்துத்
திக்குத் தோறும் திருவிளக்கேற்றிப்
பக்திப் படர்முளைப் பாலிகை பரப்பிக்
கன்னலுங் கழுகுங் கதலியும் நாட்டிப்
பன்மலர் நாற்றிப் பந்தர் சோடித்து
நலமிகு கைவலோர் நஞ்சணி மிடற்றனைக்
குலவிய திருமணக் கோலம் புனைந்தார்
வருசுரர் மகளிர் மலைமகள் தன்னைத்
திருமணக் கோலஞ் செய்தனர் ஆங்கே
எம்பிரானையும் இளங்கொடி தன்னையும்
உம்பர் எல்லாம் ஒருங்குடன் கூடிக்
கடலென விளங்கும் காவணந் தன்னிற்
சுடர்விடு பவளச் சுந்தரப் பலகையில்
மறைபுகழ்ந்து ஏத்த மகிழ்ந்து உடன் இருத்திப்
பறையொலியோடு பனிவளை ஆர்ப்ப
வதுவைக்கு ஏற்ற மறைவிதி நெறியே
சதுர்முகன் ஓமச் சடங்குகள் இயற்றத்
தறுகலன் ஒளிபொன் தாலி பூட்டிச்
சிறுமதி நுதலியைச் சிவன்கைப் பிடித்தபின்
அரிவலஞ் சூழ எரிவலம் வந்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பரிவுடன் பரிமளப் பாயலில் வைகிப்
போதுஅணி கருங்குழற் பூவை தன்னுடனே
ஓதநீர் வேலைசூழ் உஞ்சையம் பதிபுக
ஏரார் வழியின் எண்திசை தன்னைப்
பாரா தேவா பனிமொழி நீ என
வருங்கருங் குழலாள் மற்றும் உண்டோ எனத்
திருந்து இழை மடந்தை திரும்பினள் பார்க்கக்
களிறும் பிடியுங் கலந்து விளையாடல் கண்டு
ஒளிர்மணிபூணாள் உரவோன் உடனே
இவ் வகையாய் விளையாடுவோம் இங்கென
அவ்வகை அரனும் அதற்கு உடன் பட்டு
மதகரி உரித்தோன் மதகரி யாக
மதர்விழி உமைபிடி வடிவம் அதாகிக்
கூடிய கலவியில் குவலயம் விளங்க
நீடிய வானோர் நெறியுடன் வாழ
அந்தணர் சிறக்க ஆனினம் பெருகச்
செந்தழல் வேள்வி வேத ஆகமஞ் சிறக்க
அறம்பல பெருக மறம்பல சுருங்கத்
திறம்பல அரசர் செகதலம் விளங்க
வெங்கரி முகமும் வியன்புழைக்கையோடு
ஐங்கர தலமும் மலர்ப்பதம் இரண்டும்
பவளத்து ஒளிசேர் பைந் துவர்வாயுந்
தவளக் கிம்புரித் தடமருப்பு இரண்டுங்
கோடி சூரியர் போற் குலவிடு மேனியும்
பேழைபோல் அகன்ற பெருங்குட வயிறும்
நெற்றியில் நயனமும் முப்புரி நூலுங்
கற்றைச் சடையுங் கனக நீள்முடியுந்
தங்கிய முறம்போல் தழைமடிச் செவியுமாய்
ஐங்கரத்து அண்ணல் வந்து அவதரித்தலும்
பொங்கரவு அணிந்த புண்ணிய மூர்த்தியும்
மங்கை மனமிக மகிழ்ந்து உடன் நோக்கி
விண்ணு ளோர்களும் விரிந்த நான் முகனும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மண்ணு ளோர்களும் வந்து உனை வணங்க
ஆங்கு அவர் தங்கட்கு அருள் சுரந்து அருளித்
தீங்கது தீர்த்துச் செந்நெறி அளித்துப்
பாரண மாகப் பலகனி அருந்தி
ஏரணி ஆலின்கீழ் இனிதுஇரு என்று
பூதலந் தன்னிற் புதல்வனை இருத்திக்
காதல்கூர் மடநடைக் கன்னியுந் தானும்
மைவளர் சோலை மாநகர் புகுந்து
தெய்வ நாயகன் சிறந்து இனிது இருந்த பின்
வான வராலும் மானு டராலுங்
கானமர் கொடிய கடு விலங்காலுங்
கருவிகளாலுங் காலனாலும்
ஒரு வகையாலும் உயிரழியாமல்
திரம்பெற மாதவஞ் செய்து முன்னாளில்
வரம் பெறுகின்ற வலிமை யினாலே
ஐம்முகச் சீயம் ஒத்து அடற்படை சூழக்
கைம்முகம் படைத்த கயமுகத்து அவுணன்
பொன்னுலகு அழித்துப் புலவரை வருத்தி
இந்நிலத் தவரை இடுக்கண் படுத்திக்
கொடுந்தொழில் புரியுங் கொடுமை கண்டு ஏங்கி
அடுந்தொழிற் குலிசத்து அண்ணலும் அமரருங்
கறைபடு கண்டக் கடவுளைப் போற்றி
முறையிடக் கேட்டு முப்புரம் எரித்தோன்
அஞ்சலீர் என்று அவர்க்கு அபயங் கொடுத்தே
அஞ்சுகைக் கரிமுகத்து அண்ணலை நோக்கி
ஆனை மாமுகத்து அவுணனோடு அவன் தன்
சேனைகள் முழுவதுஞ் சிந்திடப் பொருது
குன்றுபோல் வளர்ந்த குறட்படை கூட்டி
வென்று வா என்று விடை கொடுத்தருள
ஆங்கு அவன் தன்னோடு அமர்பல உடற்றிப்
பாங்குறும் அவன்படை பற்றறக் கொன்றபின்
தேர்மிசை ஏறிச் சினங்கொடு செருவிற்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கார்முகம் வளைத்த கயமுகா சுரன்மேல்
ஒற்றைவெண் மருப்பை ஒடித்து அவன் உரத்திற்
குற்றிட எறிந்தான் குருதிசோர்ந் திடவே
சோர்ந்தவன் வீழ்ந்து துண்ணென எழுந்து
வாய்ந்த மூடிகமாய் வந்து அவன் பொரவே
வந்த மூடிகத்தை வாகனம் ஆக்கி
எந்தை விநாயகன் ஏறினன் இப்பால்
எறிந்த வெண்மருப்பு அங்கு இமைநொடி அளவிற்
செறிந்தது மற்று அவன் திருக் கரத்தினிலே
வெல்லவைக் கதிர்வேல் விழிபடைத்து அருளும்
வல்லவை தனைத்தன் மனை என மணந்தே
ஓகையோடு எழுந்து ஆங்கு உயர்படை சூழ
வாகையும் புனைந்து வரும் வழி தன்னிற்
கருச்சங் கோட்டிற் கயல் கமுகு ஏறும்
திருச்செங் காட்டிற் சிவனை அர்ச்சித்துக்
கணபதீச் சரம் எனுங் காரண நாமம்
பணபதி புகழ்தரு பதிக்கு உண்டாக்கிச்
சங்கரன் பார்ப்பதி தனிமன மகிழ
இங்குவந்து அன்புடன் எய்திய பின்னர்க்
கணங்களுக்கு அரசாய்க் கதிர்முடி சூட்டி
இணங்கிய பெருமை பெற்று இருந்திட ஆங்கே
தேவர்கள் முனிவர் சித்தர் கந்தருவர்
யாவரும் வந்து இவன் ஏவல் செய்திடுநாள்
அதிகமாய் உரைக்கும் ஆவணித் திங்களின்
மதிவளர் பக்கம் வந்திடு சதுர்த்தியில்
விநாயகற் குரிய விரதமென்று என்றெண்ணி
மனாதிகள் களித்து மரபொடு நோற்றார்
இப்படி நோற்றிட்டு எண்ணிய பெருநாள்
ஒப்பரும் விரதத்து உறும் ஒரு சதுர்த்தியில்
நோற்று நற்பூசை நுடங்காது ஆற்றிப்
போற்றி செய்திட்டார் புலவர் ஐங்கரனை



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மருமலர் தூவும் வானவர் முன்னே
நிருமலன் குமரன் நிருத்தம் புரிந்தான்
அனைவருங் கைதொழுது அடிஇணை போற்ற
வனைகழற் சந்திரன் மனச்செருக்கு அதனால்
பேழைபோல் வயிறும் பெருத்த காத்திரமும்
தாழ்துளைக் கையும் தழைமுறச் செவியும்
கண்டனன் நகைத்தான் கரிமுகக் கடவுளும்
கொண்டனன் சீற்றங்குபேரனை நோக்கி
என்னைக் கண்டு இங்கு இகழ்ந்தனை சிரித்தாய்
உன்னைக் கண்டவர் உரைக்கும் இத்தினத்திற்
பழியொடு பாவமும் பலபல விதனமும்
அழிவும் எய்துவர் என்று அசனிபோற் சபித்தான்
விண்ணவர் எல்லாம் மிகமனம் வெருவிக்
கண்ணருள் கூருங் கடவுள் இத் தினத்திற்
கோரவெஞ் சினமிகக் கொண்டனன் அந்நாள்
மார்கழித் திங்கள் மதிவளர் பக்கஞ்
சதயந் தொட்ட சட்டிநல் விரதமென்று
இதயத்து எண்ணி யாவரும் நோற்றார்.
இப்புவி மாந்தர் இயம்பிய விரதம்
வைப்புடன் நோற்ற வகை இனிச் சொல்வாம்
குருமணி முடிபுனை குருகுலத்து உதித்த
தருமனும் இளைய தம்பியர் நால்வருந்
தேவகி மைந்தன் திருமுக நோக்கி
எண்ணிய விரதம் இடையூ றின்றிப்
பண்ணிய பொழுதே பலிப்பு உண் டாகவுஞ்
செருவினில் எதிர்த்த செறுநரை வென்று
மருமலர்ப் புயத்தில் வாகை சூடவும்
எந்தத் தெய்வம் எவ்விரதத்தை வந்தனை
செய்யில் வருநமக்கு உரையெனப்
பாட்டுஅளி துதையும் பசுந்துழாய் மார்பனுங்
கேட்டருள் வீர் எனக் கிளர்த்த லுற்றான்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்தோன்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விக்கினந் தீர்க்கும் விநாயக மூர்த்தி
ஓடவைத் திடும்பொன் ஒத்துஒளி விளங்குங்
கோடி சூரியர்போற் குலவிய மேனியன்
கடகரி முகத்தோன் காத்திரம் பெருத்தோன்
தடவரை போலுஞ் சதுர்ப்புய முடையோன்
சர்வா பரணமுந் தரிக்கப் பட்டவன்
உறுமதிக் குழவிபோ லொருமருப் புடையோன்
ஒருகையில் தந்தமும் ஒருகையிற் பாசமும்
ஒருகையில் மோதகம் ஒருகையிற் செபஞ்செய்
உத்தம மாலையோன் உறு நினைவின்படி
சித்தி செய்வதனாற் சித்தி விநாயகன்
என்று இமையவரும் யாவருந் துதிப்ப
நன்றி தரும் திருநாமம் படைத்தோன்
புரவலர்க் காணப் புறப்படும் போதும்
செருவினில் யுத்தஞ் செய்திடும் போதும்
வித்தி யாரம்பம் விரும்பிடும் போதும்
உத்தி யோகங்கள் உஞற்றிடும் போதும்
ஆங்கவன் தன்னை அருச்சனை புரிந்தாற்
தீங்கு உறாது எல்லாஞ் செயம் உண்டாகும்
கரதலம் ஐந்துடைக் கணபதிக்கு உரிய
விரதமொன்று உளது அதை விரும்பி நோற்றவர்க்குச்
சந்ததி தழைத்திடுஞ் சம்பது உண்டாம்
புந்தியில் நினைந்த பொருள்கை கூடும்
மேலவர் தமையும் வென்றிட லாமெனத்
தேவகி மைந்தன் செப்பிடக் கேட்டு
நுவலரும் விரதம் நோற்றிடும் இயல்பும்
புகர்முகக் கடவுளைப் பூசை செய்விதமும்
விரித்தெமக்கு உரைத்திட வேண்டுமென்று இரப்ப
வரைக்குடை கவித்தோன் வகுத்துரை செய்வான்
தேருநீர் ஆவணித் திங்களின் மதிவளர்
பூர்வ பக்கம் புணர்ந்திடு சதுர்த்தியின்
முந்தும் புலரியின் முறை நீர் படிந்து


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சந்தி வந்தனந் தவறாது இயற்றி
அத்தினம் அதனில் ஐங்கரக் கடவுளைப்
பத்தியோடு அர்ச்சனை பண்ணுதல் வேண்டும்
வெள்ளியாற் பொன்னால் விளங்கும் அவன் றன்
ஒள்ளிய அருள் திரு உருவுண்டாக்கிப்
பூசனை புரியப் புகன்றனர் பெரியோர்
ஆசுஇலா மண்ணால் அமைத்தலுந் தகுமால்
பூசை செய்திடும் இடம் புனிதமது ஆக்கி
வாசமென் மலரின் மஞ்சரி தூக்கிக்
கோடிகம் கோசிகம் கொடி விதானித்து
நீடிய நூல்வளை நிறைகுடத்து இருத்தி
விந்தைசேர் சித்தி விநாயகர் உருவைச்
சிந்தையில் நினைந்து தியானம் பண்ணி
ஆவா கனம் முதல் அர்க்கிய பாத்தியம்
வாகா ராச மனம் வரை கொடுத்து
ஐந்து அமிர்தத்தால் அபிடேகித்துக்
கந்தம் சாத்திக் கணேச மந்திரத்தால்
ஈசுர புத்திரன் என்னும் மந்திரத்தால்
மாசு அகல் இரண்டு வத்திரஞ் சாத்திப்
பொருந்து உமை சுதனாப் புகலு மந்திரத்தால்
திருந்தும் பளிதத் தீபங் கொடுத்துப்
பச்சறுகுடன் இருபத்தொரு விதமாய்
பத்திர புஸ்பம் பலபல கொணர்ந்தே
உமாசுதன் கணாதிபன் உயர்கரி முகத்தோன்
குமார குரவன் பாசாங் குசகரன்
ஏக தந்தன் ஈசுர புத்திரன்
ஆகு வாகனன் அருள்தரு விநாயகன்
சர்வ காரியமுந் தந்தருள் புரிவோன்
ஏரம்ப மூர்த்தி என்னும் நாமங்களால்
ஆரம்பத்துடன் அர்ச்சனை பண்ணி
மோதகம் அப்பம் முதற் பணிகாரம்
தீது அகல் மாங்கனி தீங்கதலிப்பழம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வருக்கை கபித்த மாதுளங் கனியொடு
தரித்திடு நெட்டிலைத் தாழைமுப் புடைக்காய்
பருப்புநெய் பொரிக்கறி பால்தயிர் போனகம்
விருப்புள சுவைப்பொருள் மிகவும் முன்வைத்து
உருத்திரப்பிரியன் என்று உரைக்கும் மந்திரத்தால்
நிருந்தன் மகற்கு நிவேதனங் கொடுத்து
நற்றவர் புகன்ற நானான்கு உபசாரமும்
மற்றவன் திருவுளம் மகிழ்ந்திடச் செய்து
எண்ணுந் தகுதி இருபிறப் பாளர்க்கு
உண் அறு சுவைசேர் ஓதனம் நல்கிச்
சந்தன முத்துத் தானந் தக்கிணை
அந்தணர்க்கு ஈந்திட்டு அருச்சகன் தனக்குத்
திருத்தகு விநாயகத் திருவுருவத்தைத்
தரித்த வத்திரத்துடன் தானமாக் கொடுத்து
நைமித்திகம் என நவில்தரு மரபால்
இம்முறை பூசனை யாவர் செய்தாலும்
எண்ணிய கருமம் யாவையும் முடிப்பர்
திண்ணிய செருவிற் செயம்மிகப் பெறுவர்
அரன் இவன் தன்னை முன் அர்ச்சனை பண்ணிப்
புரமொரு மூன்றும் பொடிபட எரித்தான்
உருத்திரன் இவனை உபாசனை பண்ணி
விருத்திரா சுரனை வென்று கொன்றிட்டான்
அகலிகை இவன்தாள் அர்ச்சனை பண்ணிப்
பகர்தருங் கணவனைப் பரிவுட னடைந்தாள்
தண்ணார் மதிமுகத் தாள் தமயந்தி
அன்னான் இவனை அர்ச்சனை பண்ணி
நண்ணார் பரவு நளனை அடைந்தாள்
ஐங்கரக் கடவுளை அர்ச்சனை பண்ணி
வெங்கத நிருதரை வேரறக் களைந்து
தசரதன் மைந்தன் சீதையை அடைந்தான்
பகிரதன் என்னும் பார்த்திவன் இவனை
மதிதலந் தன்னில் மலர்கொடு அர்ச்சித்து



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரநதி தன்னை வையகத்து அழைத்தான்
அட்ட தேவதைகளும் அர்ச்சித்து இவனை
அட்ட போகத்துடன் அமிர்தமும் பெற்றார்
உருக்குமணி என்னும் ஒண்டொடி தன்னைச்
செருக்கொடு வவ்விச் சிசுபாலன் தான்
கொண்டு போம் அளவிற் குஞ்சர முகவனை
வண்டு பாண்மிழற்றா மலர்கொடு அர்ச்சித்துத்
தாரியின் மறித்தவன் தனைப்புறங் கண்டு
யாமும் அங்கு அவளை இன்புறப் பெற்றோம்
புகர்முகக் கடவுளைப் பூசனை புரிந்து
மிகமிக மனத்தில் விளைந்தன பெற்றார்
இப்புவி தன்னில் எண்ணுதற்கு அரிதால்
அப்படி நீவிரும் அவனை அர்ச்சித்தால்
எப்பொருள் விரும்பினீர் அப்பொருள் பெறுவீர்
என்று கன்றெறிந்தோன் எடுத்திவை உரைப்ப
அன்றுமுதல் தருமனும் அனுசரும் இவனைப்
பூசனை புரிந்து கட்புலன் இலான் மைந்தரை
நாசனம் பண்ணி நராதிபர் ஆகிச்சிந்தையில்
நினைத்தவை செகத்தினிற் செயங்கொண்டு
அந்தமில் செல்வத்து அரசியல் பெற்றார்.
ஈங்கு இது நிற்க இவ்விரதத்து இயல்
ஓங்கிய காதை மற்றொன்று உரை செய்வாம்
கஞ்சநான் முகன் தரும் காசிபன் புணர்ந்த
வஞ்சக மனத்தாள் மாயை தன் வயிற்றிற்
சூரன் என்று ஒருவனுந் துணைவருந் தோன்றி
ஆர்கலி சூழ்புவி அனைத்தையும் அழித்தே
சீருடைச் சுவர்க்கத் திருவளங் கெடுத்தும்
புரந்தரன் முதலிய புலவரை வருத்தியும்
நிரந்தரந் தீய நெறி நடத்துதலால்
ஆயிரங் கண்ணனும் அமரரும் முனிவரும்
நீ இரங்கு எமக்கென நெடுங்கரங் கூப்பி
இரசத கிரிஉறை இறைவனை வணங்கி


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வரமிகுஞ் சூரன் வலிமைகள் உரைக்கச்
சுடர்விடு மணிமுடிச் சூரனை வெல்லக்
கதிர்விடு வடிவேல் கரதலத்து ஏந்தும்
புதல்வனைத் தருவோம் போமின் நீர்
என அமரர் கோனுக்கு அரன்விடை கொடுத்துச்
சமரவேல் விழித் தையலுந் தானுங்
கூடிய கலவியிற் கூடாது ஊடலும்
ஓடிய வானோர் ஒருங்குடன் கூடிப்
பாவகன் தன்னைப் பரிவுடன் அழைத்துச்
சூரன் செய்யுந் துயரம் எல்லாம்
ஊர் அரவு அணிந்தோற்கு உரையென உரைப்பக்
காமனை எரித்த கடவுள் என்றஞ்சிப்
பாவகன் பயமுறப் பயமுனக்கு ஏதென
உற்றிடுங் கரத்தலத்து உன்னையே தரித்தான்
நெற்றியின் நயனமும் நீயே ஆதலிற்
குற்றம் அடாது கூறுநீ சென்றென
வானவர் மொழிய மற்றவன் தானுந்
தானும் அச் சபையில் தரியாது ஏகி
எமை ஆளுடைய உமையாளுடனே
அமையா இன்பத்து அமர்ந்து இனிது இருந்த
பள்ளி மண்டபம் பாவகன் குறுகலும்
ஒள்ளிய மடந்தை ஒதுங்கி நாணுதலுந்
தெள்ளிதிற் பரமனுந் தேயுவைக் கண்டே
ஆறுமுகப் பிள்ளையை அவன் கையில் ஈதலும்
வறியவன் பெற்ற வான்பொருள் போலச்
சோதி நீண்முடிச் சுடரோன் கொணர்ந்து
வாத ராசன் மலர்கையிற் கொடுப்ப
நீதி யோடு நின்று கையேந்திப்
போத நீள் வாயுவும் பொறுக்க ஒண்ணாமல்
தரும்புனற் கங்கை தன்கையில் கொடுப்பத்
தரும்புனற் கங்கையுந் தாங்கவொண்ணாமற்
பொருந்திரைச் சரவணப் பொய்கையில் வைப்பத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்ஆர் வதனத் தாமரை ஆறுங்
கண் ஆறு இரண்டும் கரம் ஈராறும்
தூண் எனத் திரண்ட தோள் ஈராறும்
மாண் அயில் ஆதி வான்படை யுங்கொண்டு
அறுமுகக் கடவுள் அங்கு அவதரித் திடலும்
மறுகிய உம்பர் மகிழ்வுடன் கூடி
அறுமீன் களைப்பால் அளித்தீர் என்று அனுப்ப
ஆங்கவர் முலையுண்டு அறுமுகன் தானும்
ஓங்கிய வளர்ச்சி உற்றிடு நாளில்
விமலனும் உமையும் விடையுகைத்து ஆறு
தலைமகன் இருந்த சரவணத்து அடைந்து
முருகுஅலர் குழல் உமை முலைப்பால் ஊட்ட
இருவரும் இன்பால் எடுத்து எடுத்து அணைத்துத்
தேவர் தம்படைக்குச் சேனா பதியெனக்
காவல்கொண்டு அளிக்கக் கதிர்முடி சூட்டி
அயில்வேல் முதற்பல ஆயுதங் கொடுத்துத்
திசையெலாஞ் செல்லுந் தேருமொன்று உதவிப்
பூதப் படைகள் புடைவரப் போய் நீ
ஓதுறும் அவுணரை ஒறுத்திடு என்றனுப்ப
இருளைப் பருகும் இரவியைப் போலத்
தகுவரென்று அவரைச் சமரிடை முருக்கிக்
குருகுபேர் பெறுங் குன்றமுஞ் சூரன்
மருமமுந் துளைபட வடிவேல் விடுத்தே
யாவரும் வியப்புற இந்திரன் மகளாந்
தேவகுஞ் சரியைத் திருமணம் புணர்ந்திட்டு
அமரர் கோனுக்கு அமருலகு அளித்துக்
குமர வேளுங் குவலயம் விளங்க
அமரா வதியில் அமர்ந்து இனிது இருந்தான்
சமர வேலுடைச் சண்முகன் வடிவுகண்டு
அமரர் மாதர் அனைவரும் மயங்கி
எண்டருங் கற்பினை இழந்தது கண்டே
அண்டர் எல்லாம் அடைவுடன் கூடி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாதொரு பாகனை வந்து அடி வணங்கி
மருமலர்க் கடம்பன் எம் மாநகர் புகாமல்
அருள்செய வேண்டும் நீ அம்பிகா பதியென
இமையவர் உரைப்ப இறையவன் தானுங்
குமரனைக் கோபங் கொண்டுமுன் முனியக்
காவல்கொண்டு எம்வினை கட்டறுத்து அருளுஞ்
சேவலங் கொடியோன் தேசம் போகத்
திருந்திழை உமையாள் அருந்துயர் எய்தி
வருந்தி முன்னிற்க மங்கையைப் பார்த்து
மங்கை நீ தான் வருந்துதல் ஒழிகுதி
அங்கையாற் சூதெறிந்து ஆடுவோம் வாவென
வென்றதுந் தோற்றதும் விளம்புவார் யாரெனக்
குன்றமென் முலையாள் கூறிய சமயம்
புற்றுஅரவு அணிந்த புனிதனைக் காண அங்கு
உற்றனன் திருமால் ஊழ்வினை வலியாற்
சக்கிர பாணியைச் சான்றெனக் குறித்து
மிக்கதோர் சூது விருப்புடன் ஆடச்
சாயக நேருந் தடநெடுங் கருங்கண்
நாயகி வெல்ல நாயகன் தோற்ப
இன்பவாய் இதழ் உமையாள் வென்றேன் என
எம்பெருமானும் யான்வென்றேன் என
ஒருவர்க் கொருவர் உத்தரம் பேசி
இருவருஞ் சாட்சி இவனைக் கேட்ப
மாமனை வதைத்த மால்முகம் நோக்கிக்
காமனை எரித்தோன் கண்கடை காட்ட
வென்ற நாயகி தோற்றாள் என்றுந்
தோற்ற நாயகன் வென்றான் என்றும்
ஒன்றிய பொய்க்கரி உடன் அங்கு உரைப்பக்
கன்றிய மனத்தொடு கவுரி அங்கு உருத்து
நோக்கி நீ இருந்தும் நுவன்றிலை உண்மை
வாக்கினில் ஒன்றாய் மனத்தினில் ஒன்றாய்
மைக்கரி யுரித்தோன் வதனம் நோக்கிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொய்க்கரி உரைத்த புன்மையினாலே
கனலென வயிற்றிற் கடும்பசி கனற்ற
நிலமிசைக் குருட்டு நெட்டுடற் பாம்பாய்க்
கடகரி முகத்துக் கடவுள் வீற்றிருக்கும்
வடதரு நீழலிற் கிடவெனச் சபித்தாள்
முளரிகள் பூத்த முகில் நிறத்து உருப்போய்த்
துளவு அணி மருமனுந் துணை விழியிழந்தே
ஆண்டு அரைக் கணத்தில் ஆயிரம் யோசனை
நீண்டபைப் பாந்தள் நெட்டுடல் எடுத்து
வளர்மருப்பு ஒன்றுடை வள்ளல் வீற்றிருக்குங்
கிளர்சினை ஆலின் கீழ்க்கிடந் தனனால்
திரிகடக் கரியின் திருமுகக் கடவுளும்
வழிபடும் அடியார் வல்வினை தீர்த்தே
எழில்பெறு வடமரத்தின் கீழ் இருந்தான்
கம்ப மாமுகத்துக் கடவுள் தன் பெருமையை
அம்பு வியோருக்கு அறிவிப்போம் என
உம்பர் உலகத்து ஓர் எழு கன்னியர்
தம்பநூல் ஏணியில் தாரணி வந்து
கரிமுகக் கடவுளைக் கைதொழுது ஏத்திக்
கார்த்திகைக் கார்த்திகைக் கழிந்த பின்னாளில்
ஆர்த்த கலிங்கத்து அணியிழை வாங்கி
இருபத்தோர் இழை இன்புறக் கட்டி
ஒருபோது உண்டி உண்டு ஒரு மனமாய்
வேதத்து ஆதியும் பூமியில் எழுத்தும்
ஆதி விநாயகற்கு ஆன எழுத்தும்
மூன்றெழுத்து அதனால் மொழிந்த மந்திரமும்
தேன்தருங் குழலியர் சிந்தையுட் செபித்தே
உரைதரு பதினாறு உபசாரத்தால்
வரைமகள் மதலையை வழிபாடு ஆற்றி
இருபது நாளும் இப்படி நோற்று
மற்றை நாள் ஐங்கர மாமுகன் பிறந்த
அற்றைநாள் சதயமும் ஆறாம் பக்கமுஞ்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேரும் அத் தினத்தில் தெளிபுனல் ஆடி
வாரண முகத்தோன் வருபெருங் கோயில்
சீர்பெற மெழுகித் திருவிளக் கேற்றிக்
குலவுபொற் கலைகள் கொடு விதானித்து
மலர்பல தொடுத்திடு மாலைகள் ஆற்றிக்
கொலைபுரி வடிவேற்கு கற்குமுன் வருகை
மலைமுகக் கடவுளை மஞ்சனம் ஆட்டிப்
பொற்கலை நன்னூற் பூந்துகில் சாத்திச்
சொற்பெறு சந்தனச் சுகந்தம் பூசிச்
செருந்தி சண்பகஞ் செங்கழு நீரொடு
குருத்து மல்லிகை கோங்கொடு பிச்சி
கருமுகை புன்னை கடிகமழ் பாதிரி
மருவிரி ஞாழல் மகிழ் இரு வாட்சி
தாமரை முல்லை தழையவில் கொன்றை
பூமலர் நொச்சி பூத்தமைக் குவளை
காந்தள் ஆத்தி கடம்பு செவ்வந்தி
வாய்ந்த நல்எருக்கு மலர்க்கர வீரம்
பச்சிலை நொச்சி படர்கொடி அறுகு
முத்தளக் கூவிளம் முதலிய சாத்தித்
தூப தீபங்கள் சுகம்பெறக் கொடுத்தே
அப்பம் மோதகம் அவல் எள்ளுருண்டை
முப்பழந் தேங்காய் முதிர்மொளிக் கரும்பு
தேனுடன் சர்க்கரை செவ்விள நீருடன்
பால்நறு நெய்தயிர் பருப்புடன் போனகங்
கற்பகக் கடவுள் களித்திடத் திருமுன்
பொற்புறப் படைத்துப் பூசனை பண்ணி
நோற்பது கண்டு நோலாது இருந்த
பாப்புரு வாகிய பஞ்சா யுதனும்
யாப்புறு கொங்கையீர் யானும் நோற்பேன் என
ஆங்கு அவன் தனக்கும் வேண்டுவது அளித்துப்
பாங்கொடு இவ்விரதம் பரிந்து நோற்பித்தார்
அண்டர் நாயகனாம் ஐங்கரன் அருளால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விண்டுவும் பண்டுஉள வேடம் பெற்றே
உஞ்சைமா நகர்புகுந்து உமையொடு
விமலன் கஞ்சநாள் மலர்ப்பதங் கைதொழு திடலும்
பஞ்சிமென் சீறடிப் பார்ப்பதி நெஞ்சின்
வெஞ்சினம் மிகுந்து விமலனை நோக்கி
யானிடுஞ் சாபம் நீங்கியது ஏதென
மானெடுங் கண்ணி மணிக்கதவு அடைப்ப
இறையவன் இதற்குக் காரணம் ஏதென
மறிகடல் துயிலும் மாயவன் உரைப்பான்
பிறைமருப்பு ஒன்றுடைப் பிள்ளை அன்று
எனக்குத் தந்தருள் புரிந்த தவப்பயன் ஈதெனச்
சிந்தை மகிழ்ந்து தேவர் தேவனும்
பூங்கொடி அடைத்த பொன்தாழ் நீங்கச்
சாங்குமுன் உரைத்த சக்கர பாணி
இக்கதை சொல்ல அக்கணி சடையனும்
மிக்கநல் விரதம் விருப்புடன் நோற்றபின்
மாதுஉமை அடைந்த வன்தாழ் நீக்கி
நாதனை நணுகிட நம்பனும் நகைத்தான்
நானோ வந்து நகையானது எனத்
தேன்நேர் மொழியாள் தெளியக் கூறென
நன்மதி நுதலாய் நானிலந் தன்னில்
உன்மகன் நோன்பின் உறுதி அறிந்து
சிந்தை மகிழ்ந்து சிரித்தேன் யானென
அந்தமில் அரனை ஆயிழை வணங்கிப்
பொருஞ் சூர் அறவேல் போக்கிய குமரன்
வரும்படி யானும் வருத்தி நோற்பேனென
இறையவன் கதைசொல ஏந்திழை நோற்றபின்
குறமட மகளைக் குலமணம் புரிந்தோன்.
சுடர்வடி வேலோன் தொல்வினை தீர்ந்து
தாதுமை வண்டு உழுந்தாமத் தாமனை
மாதுமை யாளை வந்து கண்டனனே
கண்ண நீ கண்ணிலாக் கட்செவி யாகெனத்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தண்நறுங் குழலுமை சாபமிட்டதுவும்
அக்கு நீறணியும் அரன்முதல் அளித்த
விக்கின விநாயக விரதம் நோற்று அதன்பின்
சுடர்க்கதை ஏந்துந் துளவ மாலையன்
விடப்பணி உருவம் விட்டு நீங்கியதும்
பவுரிகொள் கூத்துடைப் பரமனும் நோற்றுக்
கவுரி அன்று அடைத்த கபாடந் திறந்ததும்,
வாசமென் குழலுடை மாதுமை நோற்பத்
தேசம் போகிய செவ்வேள் வந்ததும்,
வானவர் நோற்று வரங்கள் பெற்றதும்,
நாரத முனிவன் நவின்றிடக் கேட்டே
இந்நிலந் தன்னில் இவ்விரதத்தை
மன்னவன் வச்சிர மாலிமுன் நோற்றுக்
காயத் தெழுந்த கடும்பிணி தீர்த்து
மாயிரும் புவியின் மன்னனாய் வாழ்ந்து
தடமுலைத் திலோத்தமை தனைமணம் புரிந்து
மழவிடை போற்பல மைந்தரைப் பெற்றுக்
கடைமுறை வெள்ளியங் கயிலையில் உற்றான்
பரிவொடு இவ்விரதம் பாரகந் தன்னில்
விரைகமழ் நறுந்தார் விக்ர மாதித்தன்
மறிகடற் புவிபெற வருந்தி நோற்றிடுநாள்
மற்றவன் காதன் மடவரல் ஒருத்தி
இற்றிடும் இடையாள் இலக்கண சுந்தரி
மெத்த அன்புடன் இவ் விரதம் நோற்பேனென
அத்தந் தன்னில் அணியிழை செறித்துச்
சித்தம் மகிழ்ந்து சிலநாள் நோற்றபின்
உற்ற நோன்பின் உறுதி மறந்து
கட்டிய இழையைக் காரிகை அவிழ்த்து
வற்றிய கொவ்வையின் மாடே போட
ஆங்கு அது தழைத்தே அலருந் தளிருமாய்ப்
பாங்குற ஓங்கிப் படர்வது கண்டு
வேப்பஞ் சேரியிற் போய்ச் சிறையிருந்த


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூப்பயில் குழல்சேர் பொற்றொடி யொருத்தி
அவ்வியம் இல்லாள் அவ்விடந் தன்னிற்
கொவ்வை அடகு கொய்வாள் குறுகி
இழையது கிடப்பக் கண்டு அவள் எடுத்துக்
குழைதவிழ் வரிவிழிக் கோதை கைக்கட்டி
அப்பமோடு அடைக்காய் அவைபல வைத்துச்
செப்பமுடனே திருந்திழை நோற்றிடக்
கரிமுகத்து அண்ணல் கருணை கூர்ந்து
பண்டையில் இரட்டி பதம் அவட்கு அருள
கொண்டுபோய் அரசனுங் கோயிலுள் வைத்தான்
விக்கிர மாதித்தன் விழிதுயில் கொள்ள
உக்கிரமான உடைமணி கட்டித்
தண்டையுஞ் சிலம்புத் தாளினின்று ஒலிப்பக்
கொண்டல் போல்வருங் குஞ்சர முகத்தோன்
மனமிகக் கலங்கு மன்னவன் தன்னிடங்
கனவினில் வந்து காரண மாக
இலக்கண சுந்தரி இம்மனை இருக்கிற்
கலக்கம் வந்திடுங் கழித்திடு புறத்தெனத்
துண்ணென எழுந்து துணைவியை நோக்கிக்
கண்ணுறக் கண்ட கனவின் காரணம்
அண்ணல் உரைத்திடும் அவ்வழி தன்னில்
ஆனை குதிரை அவைபல மடிவுற
மாநகர் கேடுறும் வகையது கண்டு
இமைப்பொழுது இவள் இங்கு இருக்கலாகாது என
அயற் கடை அவனும் அகற்றிய பின்னர்
வணிகன் தனது மனைபுகுந்து இருப்ப
மணியும் முத்தும் வலிய கல்லாய்விட
அணியிழை தன்னை அவனும் அகற்ற
உழவர் தம்மனையில் உற்று அவள் இருப்ப
வளர்பயிர் அழிந்து வளம்பல குன்ற
அயன்மனை அவரும் அகற்றிய பின்னர்க்
குயவன் மனையிற் கோற்றொடி செல்லக்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குயக்கலம் உடைந்து கொள்ளை போக
அயற்கடை அவனும் அகற்றிய பின்னர்த்
தூசுதூய்து ஆக்குந் தொழிலோர் மனைபுகத்
தூசுகளெல்லாந் துணிந்து வேறாகத்
தூசரும் அவளைத் தூரஞ் செய்ய
மாலைக் காரன் வளமனை புகலும்
மாலை பாம்பாம் வகையது கண்டு
ஞாலம் எல்லாம் நடுங்கவந்து உதித்தாய்
சாலவும் 'பாவிநீ தான்யார்?' என்ன
வெம்மனம் மிகவும் மேவி முனிவுறா
அம்மனை அவனும் அகற்றிய பின்னர்
அவ்வை தன்மனை அவள் புகுந்திருப்ப
அவ்வை செல்லும் அகங்கள் தோறும்
வைதனர் எறிந்தனர் மறியத் தள்ளினர்
கைகொடு குற்றினர் கண்டோர் பழித்தனர்
அவ்வை மீண்டும் தன் அகம் அதிற்சென்று
இவ்வகைக் கன்னி நீ யாரென வினாவக்
காத்தாண்டு உலகு கருணையோடு ஆண்ட
மார்த்தாண்ட ராசன் மாமகள் ஒருத்தி
எல்லார்க்கும் மூத்தாள் இலக்கண சுந்தரி
சொல்லு விக்கிரம சூரியன் மனையெனச்
சீர்கெட இருந்த தெரிவையை நோக்கி
நீரது கொண்டு நிலம் மெழுகிடுகெனச்
சாணி எடுக்கத் தையலுஞ் சென்றாள்
சாணியும் உழுத்துத் தண்ணீர் வற்றிப்
பேணிய புழுவாய்ப் பெரிது தோன்ற
மானேர் விழியாள் வருந்துதல் கண்டு
தானே சென்று சாணி எடுத்துத்
தண்ணீர் கொணர்ந்து தரை மெழுக்கிட்டு
மண்ணிய வீட்டில் மணிவிளக்கு ஏற்றிப்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தகம் எடுத்து வாவெனப் புகலப்
புத்தகம் பாம்பாய்ப் பொருந்தி நின்று ஆட
மெத்தஉள் நடுங்கி வீழ்ந்தவள் கிடப்பக்
கொவ்வையங் கனிவாய்க் கோதையை விலக்கி
அவ்வை தானே அகமதிற் சென்று
புத்தகம் எடுத்துப் பொருந்தப் பார்த்து
வித்தக நம்பி விநாயக மூர்த்தி
கற்பகப் பிள்ளைசெய் காரியம் இதுவென
உத்தமி அவ்வை உணர்ந்து முன்அறிந்து
தவநெறி பிழைத்த தையலை நோக்கி
நுவலரும் விநாயக நோன்பு நோற்றிடுக எனக்
கரத்து மூஏழு இழைக் காப்புக் கட்டி
அப்பமும் அவலும் மாம்பழப் பண்டமுஞ்
செப்ப மதாகத் திருமுன் வைத்தே
அவ்வை கதைசொல ஆயிழை கேட்டு
மத்தகக் களிற்றின் மகா விரதத்தை
வித்தகமாக விளங்கு இழை நோற்றுக்
கற்பக நம்பி கருணை பெற்றதன் பின்,
சக்கர வாள சைனியத்தோடு
விக்ர மாதித்தன் வேட்டையிற் சென்று
தானுஞ் சேனையுந் தண்ணீர் விரும்பி
எவ்வகை செய்வோம் எனஉளம் மெலிந்தே
அவ்வை தன்மனை அங்குஅவர் அணுக
எய்துந் தாகமும் இளைப்புங் கண்டு
செவ்வே அவற்றைத் தீர்க்க எண்ணி
இலக்கண சுந்தரி என்பவள் தன்னை
அப்பமும் நீரும் அரசற்கு அருள்எனச்
செப்பிய அன்னை திருமொழிப் படியே
உண்நீர்க் கரகமும் ஒரு பணிகாரமும்
பண்நேர் மொழியாள் பார்த்திபற்கு உதவ
ஒப்பறு படையும் உயர்படை வேந்தனும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அப்பசி தீர அருந்திய பின்னர்
ஆனை குதிரை அவைகளும் உண்டுந்
தான்அது தொலையாத் தன்மையைக் கண்டே
இவ்வகை சமைத்த நீ யாரென வினவ
அவ்வல் அம் குழலாள் மௌனமாய் நிற்ப
அவ்வை தான்சென்று அரசற்கு உரைப்பாள்
கணபதி நோன்பின் காரணங் காண் இது
குணமுடை இவள் உன் குலமனையாட்டி
இலக்கண சுந்தரி என்று அவ்வை கூற
மங்கையை நோக்கி மனம்மிக மகிழ்ந்து
திங்கள்நேர் வெள்ளிச் சிவிகையில் ஏற்றிக்
கொண்டுஊர் புகுந்தான் கொற்ற வேந்தனும்
ஒண்தொடி யாரில் உயர்பதம் உதவினன்
சிந்துர நுதலார் சென்று அடி பணியச்
சுந்தரி இருந்தாள் சுகத்துடன் மகிழ்ந்தே.

## காப்பு

கரும்பும் இளநீரும் காரெள்ளுந் தேனும்
விரும்பும் அவல்பலவும் மேன் மேலருந்திக்
குணமுடையனாய் வந்து குற்றங்கள் தீர்க்கும்
கணபதியேயிக் கதைக்குக் காப்பு.

திருவிளங்கு மான்மருகா சேவ தனிலேறி
வருமரன்றா னீன்றருளும் மைந்தா – முருகனுக்கு
முன்பிறந்த யானை முகவா உனைத் தொழுவேன்
என்கதைக்கு நீயென்றுங் காப்பு.

## நூற்பயன்

பொன்னுமிகும் கல்விமிகும் புத்திரரோடு எப்பொருளும்
மன்னும் நவமணியும் வந்துஅணுகும் – உன்னி
ஒருக்கொம்பின் யானைமுக உத்தமனார் நோன்பின்
திருக்கதையைக் கேட்கச் சிறந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொற்பணைக்கை முக்கண் புகார்முகத்துப் பொன்மவுலிக்
கற்பகத்தின் நோன்பின் கதைதன்னைச் – சொற்பெருகக்
கற்றவரும் நோற்றவருங் காதலித்துக் கேட்டவரும்
பெற்றிடுவர் கற்பகத்தின் பேறு.

வெள்ளை எருதுஏறும் விரிசடையோன் பெற்றுஎடுத்த
பிள்ளையார் நோன்பின் பெருங்கதையை – உள்ளபடி
நோற்றார் மிகவாழ்வார் நோலாது அருகுஇருந்து
கேட்டோர் க்கும் வாராது கேடு.

சூலிலார் நோற்கிற் சுதரை மிகப்பெறுவார்
சாலமிகும் வெங்கலியார் தாம்நோற்கில் – மேலைப்
பிறப்புஎல்லாம் நல்ல பெருஞ்செல்வம் எய்திச்
சிறப்பிலே வாழ்வார் சிறந்து.

**பிள்ளையார் கதை முற்றுப் பெற்றது**

**திருச்சிற்றம்பலம்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருவெம்பாவை



ஆதியும் அந்தமும் இல்லா அரும்பெருஞ்
    சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாள் தடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
    மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
    போதா ரமளியின்மேல் நின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தாள்என் னேயென்னே
    ஈதேயெம் தோழி பரிசேலோர் எம்பாவாய்.

பாசம் பரஞ்சோதிக் கென்பாய் இராப்பகல்நாம்
    பேசும்போ தெப்போதிப் போதா ரமளிக்கே
நேசமும் வைத்தனையோ நேரிழையாய் நேரிழையீர்
    சீசி யிவையுஞ் சிலவோ விளையாடி
ஏசு மிடமீதோ விண்ணோர்க ளேத்துதற்குக்
    கூசு மலர்ப்பாதந் தந்தருள வந்தருளுந்
தேசன் சிவலோகன் தில்லைச்சிற் றம்பலத்துள்
    ஈசனார்க் கன்பார்யாம் ஆரேலோர் எம்பாவாய்.

முத்தன்ன வெண்ணகையாய் முன்வந் தெதிரெழுந்தென்
    அத்தன்ஆ னந்தன் அமுதன்என் றள்ளூறித்
தித்திக்கப் பேசுவாய் வந்துன் கடைதிறவாய்
    பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

புத்தடியோம் புன்மைதீர்த் தாட்கொண்டாற் பொல்லாதோ
எத்தோநின் அன்புடைமை எல்லோம் அறியோமோ
சித்தம் அழகியார் பாடாரோ நம்சிவனை
இத்தனையும் வேண்டும் எமக்கேலோர் எம்பாவாய்.

ஒண்ணித் திலநகையாய் இன்னம் புலர்ந்தின்றோ
வண்ணக் கிளிமொழியார் எல்லாரும் வந்தாரோ
எண்ணிக்கொ டுள்ளவா சொல்லுகோம் அவ்வளவும்
கண்ணைத் துயின்றவமே காலத்தைப் போக்காதே
விண்ணுக் கொருமருந்தை வேத விழுப்பொருளைக்
கண்ணுக் கினியானைப் பாடிக் கசிந்துள்ளம்
உண்ணெக்கு நின்றுருக யாமாட்டோம் நீயேவந்து
எண்ணிக் குறையில் துயிலேலோர் எம்பாவாய்.

மாலறியா நான்முகனும் காணா மலையினைநாம்
போலறிவோம் என்றுள்ள பொக்கங்க ளேபேசும்
பாலூறு தேன்வாய்ப் படிறீ கடைதிறவாய்
ஞாலமே விண்ணே பிறவே அறிவரியான்
கோலமும் நம்மைஆட் கொண்டருளிக் கோதாட்டும்
சீலமும் பாடிச் சிவனே சிவனேயென்று
ஓலம் இடினும் உணராய் உணராய்காண்
ஏலக் குழலி பரிசேலோர் எம்பாவாய்.

மானேநீ நென்னலை நாளைவந் துங்களை
நானே எழுப்புவன் என்றலும் நாணாமே
போன திசைபகராய் இன்னம் புலர்ந்தின்றோ
வானே நிலனே பிறவே அறிவரியான்
தானேவந் தெம்மைத் தலையளித்தாட் கொண்டருளும்
வான்வார் கழல்பாடி வந்தோர்க்குன் வாய்திறவாய்
ஊனே உருகாய் உனக்கே உறும்எமக்கும்
ஏனோர்க்கும் தங்கோனைப் பாடேலோர் எம்பாவாய்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்னே இவையுஞ் சிலவோ பலஅமரர்
உன்னற் கரியான் ஒருவன் இருஞ்சீரான்
சின்னங்கள் கேட்பச் சிவனென்றே வாய்திறப்பாய்
தென்னாஎன் னாமுன்னம் தீசேர் மெழுகொப்பாய்
என்னானை என்னரையன் இன்னமுதென் றெல்லோமும்
சொன்னோம்கேள் வெவ்வேறாய் இன்னந் துயிலுதியோ
வன்னெஞ்சப் பேதையர்போல் வாளா கிடத்தியால்
என்னே துயிலின் பரிசேலோர் எம்பாவாய்.

கோழி சிலம்பச் சிலம்பும் குருகெங்கும்
ஏழில் இயம்ப இயம்பும்வெண் சங்கெங்கும்
கேழில் பரஞ்சோதி கேழில் பரங்கருணை
கேழில் விழுப்பொருள்கள் பாடினோம் கேட்டிலையோ
வாழியீ தென்ன உறக்கமோ வாய்திறவாய்
ஆழியான் அன்புடைமை ஆமாறும் இவ்வாறோ
ஊழி முதல்வனாய் நின்ற ஒருவனை
ஏழைபங் காளனையே பாடேலோர் எம்பாவாய்.

முன்னைப் பழம்பொருட்கு முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே
உன்னைப் பிரானாகப் பெற்றஉன் சீரடியோம்
உன்னடியார் தாள்பணிவோம் ஆங்கவர்க்கே பாங்காவோம்
அன்னவரே எங்கணவ ராவார் அவருகந்து
சொன்ன பரிசே தொழும்பாய்ப் பணிசெய்வோம்
இன்ன வகையே எமக்கெங்கோன் நல்குதியேல்
என்ன குறையும் இலோமேலோர் எம்பாவாய்.

பாதாளம் ஏழினுங்கீழ் சொற்கழிவு பாதமலர்
போதார் புனைமுடியும் எல்லாப் பொருள்முடிவே
பேதை ஒருபால் திருமேனி ஒன்றல்லன்
வேதமுதல் விண்ணோரும் மண்ணும் துதித்தாலும்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓத உலவா ஒருதோழன் தொண்டருளன்
　　கோதில் குலத்தரன்றன் கோயிற் பிணாப்பிள்ளைகாள்
ஏதவனூர் ஏதவன்பேர் ஆருற்றார் ஆரயலார்
　　ஏதவனைப் பாடும் பரிசேலோர் எம்பாவாய்.

மொய்யார் தடம்பொய்கை புக்கு முகேரென்னக்
　　கையாற் குடைந்து குடைந்துன் கழல்பாடி
ஐயா வழியடியோம் வாழ்ந்தோங்காண் ஆரழல்போற்
　　செய்யாவெண் ணீறாடி செல்வா சிறுமருங்குல்
மையார் தடங்கண் மடந்தை மணவாளா
　　ஐயாநீ ஆட்கொண் டருளும் விளையாட்டில்
உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்
　　எய்யாமற் காப்பாய் எமையேலோர் எம்பாவாய்.

ஆர்த்த பிறவித் துயர்கெடநாம் ஆர்த்தாடும்
　　தீர்த்தன்நல் தில்லைச்சிற் றம்பலத்தே தீயாடும்
கூத்தன்இவ் வானுங் குவலயமும் எல்லோமும்
　　காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி
வார்த்தையும் பேசி வளைசிலம்ப வார்கலைகள்
　　ஆர்ப்பரவஞ் செய்ய அணிகுழல்மேல் வண்டார்ப்பப்
பூத்திகழும் பொய்கை குடைந்துடையான் பொற்பாதம்
　　ஏத்தி இருஞ்சுனைநீ ராடேலோர் எம்பாவாய்.

பைங்குவளைக் கார்மலரால் செங்கமலப் பைம்போதால்
　　அங்கங் குருகினத்தால் பின்னும் அரவத்தால்
தங்கள் மலங்கழுவு வார்வந்து சார்தலினால்
　　எங்கள் பிராட்டியும் எங்கோனும் போன்றிசைந்த
பொங்கு மடுவிரு புகப்பாய்ந்து பாய்ந்துநம்
　　சங்கஞ் சிலம்பச் சிலம்பு கலந்தார்ப்பக்
கொங்கைகள் பொங்கக் குடையும் புனல்பொங்கப்
　　பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

காதார் குழையாடப் பைம்பூண் கலனாடக்
கோதை குழலாட வண்டின் குழாமாடச்
சீதப் புனலாடிச் சிற்றம் பலம்பாடி
வேதப் பொருள்பாடி அப்பொருளா மாபாடிச்
சோதி திறம்பாடிச் சூழ்கொன்றைத் தார்பாடி
ஆதி திறம்பாடி அந்தம்ஆ மாபாடிப்
பேதித்து நம்மை வளர்த்தெடுத்த பெய்வளைதன்
பாதத் திறம்பாடி ஆடேலோர் எம்பாவாய்.

ஓரொருகால் எம்பெருமான் என்றென்றே நம்பெருமான்
சீரொருகால் வாயோவாள் சித்தங் களிகூர
நீரொருகால் ஓவா நெடுந்தாரை கண்பனிப்பப்
பாரொருகால் வந்தனையாள் விண்ணோரைத் தான்பணியாள்
பேரரையற் கிங்கனே பித்தொருவர் ஆமாறும்
ஆரொருவர் இவ்வண்ணம் ஆட்கொள்ளும் வித்தகர்தாள்
வாருருவப் பூண்முலையீர் வாயார நாம்பாடி
ஏருருவப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

முன்னிக் கடலைச் சுருக்கி யெழுந்துடையாள்
என்னத் திகழ்ந்தெம்மை ஆளுடையாள் இட்டிடையின்
மின்னிப் பொலிந்தெம் பிராட்டி திருவடிமேற்
பொன்னஞ் சிலம்பிற் சிலம்பித் திருப்புருவம்
என்னச் சிலைகுலவி நந்தம்மை ஆளுடையாள்
தன்னிற் பிரிவிலா எங்கோமான் அன்பர்க்கு
முன்னி அவள் நமக்கு முன்சுரக்கும் இன்னருளே
என்னப் பொழியாய் மழையேலோர் எம்பாவாய்.

செங்கண வன்பால் திசைமுகன்பால் தேவர்கள்பால்
எங்கும் இலாததோர் இன்பம்நம் பாலதாக்
கொங்குண் கருங்குழலி நந்தம்மைக் கோதாட்டி
இங்குநம் இல்லங்கள் தோறும் எழுந்தருளிச்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செங்கமலப் பொற்பாதந் தந்தருளுஞ் சேவகனை
அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை
நங்கள் பெருமானைப் பாடி நலந்திகழப்
பங்கயப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.

அண்ணா மலையான் அடிக்கமலஞ் சென்றிறைஞ்சும்
விண்ணோர் முடியின் மணித்தொகைவீ றற்றாற்போல்
கண்ணார் இரவி கதிர்வந்து கார்கரப்பத்
தண்ணார் ஒளிமழுங்கித் தாரகைகள் தாமகலப்
பெண்ணாகி ஆணாய் அலியாய்ப் பிறங்கொளிசேர்
விண்ணாகி மண்ணாகி இத்தனையும் வேறாகிக்
கண்ணா ரமுதமுமாய் நின்றான் கழல்பாடிப்
பெண்ணேயிப் பூம்புனல்பாய்ந் தாடேலோர் எம்பாவாய்.


உங்கையிற் பிள்ளை உனக்கே அடைக்கலம்என்று
அங்கப் பழஞ்சொற் புதுக்குமெம் அச்சத்தால்
எங்கள் பெருமான் உனக்கொன் றுரைப்போம்கேள்
எங்கொங்கை நின்னன்ப ரல்லார்தோள் சேரற்க
எங்கை உனக்கல்லா தெப்பணியுஞ் செய்யற்க
கங்குல் பகல்எங்கண் மற்றொன்றுங் காணற்க
இங்கிப் பரிசே எமக்கெங்கோன் நல்குதியேல்
எங்கெழிலென் ஞாயி றெமக்கேலோர் எம்பாவாய்.

போற்றி அருளுகநின் ஆதியாம் பாதமலர்
போற்றி அருளுகநின் அந்தமாஞ் செந்தளிர்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் தோற்றமாம் பொற்பாதம்
போற்றிஎல் லாவுயிர்க்கும் போகமாம் பூங்கழல்கள்
போற்றிஎல் லாவுயிர்க்கும் ஈறாம் இணையடிகள்
போற்றிமால் நான்முகனும் காணாத புண்டரிகம்
போற்றியாம் உய்யஆட் கொண்டருளும் பொன்மலர்கள்
போற்றியாம் மார்கழிநீ ராடேலோர் எம்பாவாய்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவிலல்

**"பயன்தூக்கார் செய்த உதவி நயன்தூக்கின்
நன்மை கடலிற் பெரிது"**



இறையருளால் எம் குடும்பத் தலைவியாய் வாழ்ந்து எண்ணிலடங்கா கடமைகளால் எங்கள் இதயக் கமலங்களை மலர்த்தி ஈசனடி சேர்ந்த **அமரர் திருமதி சறோஜாதேவி சிவபாலன்** அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்த நேரம் முதல் எம் அருகிருந்து எம்மை ஆறுதல்படுத்திய அன்பு உள்ளங்களுக்கும், தேவார திருவாசகங்களை ஓதிப் பிரார்த்தித்தோருக்கும், மலர்வளையங்கள், கண்ணீர் அஞ்சலி பிரசுரம் மற்றும் பதாதைகள் மூலம் அனுதாபம் தெரிவித்து ஆறுதல் அளித்தவர்களுக்கும், இறுதிக்கிரியைகளுக்கான சகல ஒழுங்குகளையும் மேற்கொண்ட உற்றார், அயலவர், நண்பர்களுக்கும், தொலைபேசி, சமூக வலைத்தளங்கள் ஊடாக துயர் பகிர்ந்த உறவினர்கள், நண்பர்கள், மற்றும் புலம் பெயர் உறவுகளுக்கும், இறுதிக்கிரியை, அந்தியேட்டிக் கிரியைகளையும் சிறப்புற நடத்திய குருமார்களுக்கும், இறுதி நிகழ்வுகளில் கலந்து கொண்ட அனைத்து நல்லுள்ளங்களுக்கும், இந் நினைவு மலரை சிறப்புற வடிவமைத்து அச்சிட்ட Andra Digital Image பதிப்பகத்தார்களுக்கும் மற்றும் பல வழிகளிலும் உதவி புரிந்த அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றியறிதலைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.


நன்றி

**திரு. ச.சிவபாலன்** (கணவர்)
**திரு. திருமதி லக்ஷிதா சிவஞானவேல்** (மகள், மருமகன்)
**திரு. திருமதி ஹம்ஷிதா தீபன்** (மகள், மருமகன்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வம்சாவழி






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வளமான வாழ்விற்கு

தூய்மையாக இருப்பதும்

மற்றவர்களிற்கு நன்மை

செய்வதும் தான் எல்லா

வழிபாடுகளினதும் சாரமாகும்.

தீமை செய்பவன் தனக்கும்

மற்றவர்களுக்கும் தீமை செய்கிறான்,

நன்மை செய்பவன் தனக்கும்

பிறர்க்கும் நன்மையே செய்கிறான்.

உடலும் உள்ளமும் தூய்மையின்றி

கோயிலுக்கு போவதும் இறைவனை

வழிபடுவதும் பயனற்றதாகும்.

நேர்மையுடனும் தைரியமாகவும்

பக்தி சிரத்தையுடனும் வாழ்ந்தால்

இறைவனை அடைவது உறுதி.



**“நன்னெறியே இறைவணக்கம்”**

**- சுவாமி விவேகானந்தர் -**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org